96

2/46

விஷு ஹு
மார்கழி - தை மீ

ஸம்புடம்
ஸஞ்சிகை

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - FEB 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

5, இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

JL
Q22ണ211, N4
N42:1.1.
310099

ரூபா 3—0—0

January, 1942
Vol. 1, No. 1

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	ஸ்ரீ அழகியசிங்கர் படம்	(முகப்பு)
2	ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீமுகம்	(முகப்பு)
3.	பத்ரிகையின் வரலாறு	1
4.	ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி வைபவம்	3
5.	ஆசார்ய மஹிமை	9
6.	திதி நிர்ணயம்	14
7.	ஜ்ஞாநதாநம	15
8.	ஸ்ரீ அழகியசிங்கருடைய பட்டாபிஷேக வ்ருத்தாந்தம்	18
9.	பாசுரங்களின் பகுதி	21
10.	'ந்ருஸிம்ஹ ப்ரியா' எனும் பத்ரிகையின் பெயர்க் காரணம்	23
11	ஆஸ்திக்யம்	25
12.	செய்திகள்	27
13.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	29

OFFIC… E - FEB 19… MADRA…

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆசாஸந ஸ்ரீமுகம்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

அநுசாஸந ஸ்ரீமுகம்

ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

முதல் பத்யத்தின் தாத்பர்யம்:—இவ்வளவு காலம் ஹ்ருதயஸ்தாயராக இருந்த நாம், பத்து வருஷ காலமாய் நம் ஸந்நிதிக்கு ஒரு பத்ரிகை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அதற்குப் பண்டிதர்களைக் கொண்டு அத்புதங்களான விஷயங்களை எழுதுவிக்க வேண்டுமென்றும், அப்படி அவர்கள் எழுதும் விஷயங்கள் ச்ருதி ஸ்ம்ருதி திவ்ய ப்ரபந்தங்களின் தாத்பர்யங்கள் பொதிந்துக் கொண்டிருக்குமாகையால் அவை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு அத்யந்த ப்ரியங்களாயிருக்குமென்றெண்ணி அப்பத்ரிகைக்கு "ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பெயரளிக்கவேண்டுமென்றும் மநோரதித்திருந்தோம். அம் மநோரதம் தற்காலம் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் பூர்ணமாகி, இப்பத்ரிகையும் அக் கருணையால் உண்டாகி இருக்கிறது. இங்கு 'உத்' சப்தம் விஷய ஸௌஷ்டவத்துடன் உண்டானமையைக் குறிக்கின்றது. இப்படி உண்டான அப்பத்ரிகை,

"ப்ரஸூய விவிதம் ஜகத் ததபிவ்ருத்தயே க்ஷமம் தயே
ஸமீக்ஷணவிவிதை நவப்ரஹ்யதிஷிஷ்வயம் தாத்ருஶை: ॥"

என்கிறபடி அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ள வரையில் அவைகள் போலச் சிறந்த விஷயங்களுடன் வாழக்கடவது.

இரண்டாவது பத்யத்தின் தாத்பர்யம்:—நம் ந்ருஸிம்ஹ பக்த கோடிகளின் க்ருஹங்கள் தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.

இதனால் நம் ஸந்நிதி சிஷ்யர்களும் பிறரும் இப்பத்ரிகையை வாங்கி இதிலுள்ள ஸத் விஷயங்களை நன்கு உணர்ந்து ஆநந்த பரிதர்களாகவும் லக்ஷ்மீ கடாக்ஷ விஷயர்களாவும் ஆகக்கடவர்கள் என்று அநுசாஸிக்கிறோம்.

இதி ஶம்



ஸ்ரீ அஹோபிலமடம் ௪௨வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்
ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ரமஹா தேசிகன்



OFFICE OF THE REG...
5 - FEB
MAD...

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	விஷு ௵ மார்கழி - தை ௴	ஸஞ்சிகை 1

“ 𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥”

பத்ரிகையின் வரலாறு

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஸ்ரீ நியமநத்தின்பேரில் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்ய வ்ருத்தியை உத்தேசித்து “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் திருநாமத்துடன் ஒரு மாதப் பத்ரிகை, ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே நாளது மார்கழி - தை மாஸம் (1942 ஜனவரி௴) முதல் ப்ரசுரம் செய்யப்படும்.

நமது ஆழ்வாராசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள க்ரந்தங்களில் அழுந்திக் கிடக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின்

விசேஷ தத்வங்களை வெளிப்படுத்துவதே இப்பத்ரிகையின் முக்யமான நோக்கம். விஷயங்களெல்லாம் பெரும்பாலும் எளிதான தமிழ்நடையிலேயே விவரிக்கப்படும். ஆனல் நமது விசிஷ்டாத்வைத மத க்ரந்தங்களெல்லாம் ப்ராயேண மணிப்ரவாளம் என்னும் ஸம்ஸ்க்ருதம் கலந்த தமிழ்நடையில் எழுதப் பட்டிருக்கிறபடியால், அந்த நடையின் பரிசயமும் நம்மவர்க்கு அவசியம் அபேக்ஷிதமாக இருக்குமானதால், அந்த நடையையும் அவகாசம் நேருமிடங்களில் உபயோகித்து வரலாமென்பது நமது உத்தேசம்.

உபநிஷத்துக்கள், பகவத்கீதை, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமாயுள்ள ரஹஸ்ய க்ரந்தங்கள், தமிழ் வேதம் என்று சிறப்பித்துக் கூறப்படும் ஆழ்வார் பாசுரங்கள், மற்றை அருளிச் செயல்கள் இவை முதலிய க்ரந்தங்களிலிருந்து விஷயங்களை ஆராய்ந்து எடுத்து, பெரியோர்களால் அவைகளுக்குச் செய்யப்பட்டுள்ள வ்யாக்யாநங்களை அநுஸரித்து அப்பொழுதுக்கப்பொழுது வ்யாஸங்கள் பலவாருக வெளிப்படுத்தப்படும். ரஹஸ்ய க்ரந்தங்களெல்லாம் ஆசார்ய முகமாகவே அத்யயநம் செய்யப்படவேண்டுமென்னும் நியமத்திற்கு எவ்வித விரோதமுமின்றிக்கே அவைகளில் ச்ரத்தையை உண்டு பண்ணுமளவு அவைகளின் கருத்துக்கள் மாத்ரம் விவரிக்கப்படும். அவச்யமாக இருக்குமிடங்களில் ஸம்வாத ரூபங்களான சிற்சில ஸம்ஸ்க்ருத ச்லோகங்களும் க்ரந்த லிபியில் எழுதப்பட்டுத் தமிழுரையுடன் சேர்க்கப்படும்.

ஒவ்வொரு மாஸத்திலும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய நித்யோத்ஸவாதிகளைப் பற்றியும், ஸ்ரீ ஸந்நிதியில் நடைபெறும் நித்ய ததீயாராதந க்ரந்த காலக்ஷேபங்களைப் பற்றியும், மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களான விசேஷ வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்கள் ஸங்க்ரஹிக்கப்படும். அப்பொழுதுக்கப் பொழுது ஆஸ்திகர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டிய நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களின் காலநிர்ணயம் முதலியவைகளும் பூர்வமே செய்யப்பட்டு, அவைகளைப் பற்றிய ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமநங்களும் வெளியிடப்படும்.

ஆஸ்திகர்களெல்லாரும் இந்தப் பத்ரிகையை க்ருபையுடன் ஆதரிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிருேம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி வைபவம்

210094

—

[ஸ்ரீ அஹோபில மடத்தின் திவ்யாஸ்தாநத்தில் தற்காலம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸ்ரீஸூக்தி.]

இந்த உலகத்தில் இப்பரதகண்ட மொன்றே புண்யபூமி. இது புண்ய க்ஷேத்ரங்களாலும் புண்ய தீர்த்தங்களாலும் விளங்கியுள்ளது. ராமக்ருஷ்ணாதி அவதாரங்கள் நடந்த நிலம் இதுவே. ரிஷிகளாலும் ஆழ்வாராசார்யர்களாலும் மங்களாசாஸநம் செய்யப்பட்ட தேசமும் இதுதான். பரம ஆப்தங்களான கீதாதி சாஸ்த்ரங்களும் இங்கேதான் அவதரித்தன. இப்படி இது ஸர்வோத்க்ருஷ்டமான கண்டமாகையால், அப்போதைக் கப்போது இதன் ரக்ஷணத்திற்கு வேண்டிய க்ருஷியைப் பஹுமுகமாக ஸர்வேஶ்வரன் செய்து வருகிறுன்.

பரமகாருணிகனுன அந்த ஶரண்யன், இந்தக் கண்டம் ம்லேச் சாதிகளால் ஆக்ரமிக்கப்படு மந்நாளில், தான் மஹத்தான ப்ரயாஸ மெடுத்து ஸ்தாபித்த ஸநாதந தர்மத்துக்குக் குறையொன்றும் வாராம லிருக்கும்படி அணைகோலக் கருதி, தன் திருவடி ஸம்பந்தமே அதற்குச் சிறந்த அரணுகையால், உலகமெல்லாம் தன்னைப் பூர்வத்திலேயே ஆஶ்ரயித்து ஈடேறும்படி செய்யவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, தான் நேரில் அவதரிக்கும் காலம் வருங் காலமாகையால், அத்திருவுள்ளக் கருத்தை ஸதாசார்யர் ஒருவரைக் கொண்டு பூர்த்தி பண்ணக் க்ருஷி செய்யத் தொடங்கினுன்.

அக்காலத்தில், கல்யப்தம் *4480-வதான ஸித்தார்த்தி வருஷம் புரட்டாசி மாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமி ஜ்யேஷ்டா நக்ஷத்ரம் கூடின வியாழக் கிழமையில் தநுர்லக்நத்தில் மேல்நாட்டில் திருநாராயண புரத்தில் கிடாம்பி கேசவாசார்யருக்கு ஒரு திருக் குமாரர் அவதரித்தார். ஜநித்தபோதே அக்குழந்தை, அங்குரிக்கும்போதே மணத் துடன் கூடிய திருத்துழாய் போல, ஸதாசார்ய லக்ஷணங்களால் விலக்ஷணமாய் விளங்கக் கண்டு, கேசவாசார்யர் முதலானோர் மிகுந்த ஸந்தோஷத்தையடைந்து, ஜாதகர்மம் நாமகரணம் முதலியவற்றை விதிப் படி செய்து, குழந்தைக்கு ஸ்ரீநிவாஸன் என்று பெயரிட்டார்கள். பிறகு

---

* இது, கி. பி. 1379-ம் ௵ செப்டம்பர் அக்டோபர் மாதங்களுக்குச் சரியாகும்.

அந்நப்ராஸநம், சௌளம், அக்ஷராப்யாஸம், உபநயநம் இவைகளை யதா காலம் யதா சாஸ்த்ரம் செய்திட்டு வேதாப்யாஸமும் செய்வித்தார்கள்.

பிதாவான கேசவாசார்யர் இவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து, திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை ஓதுவித்தார். இவர் பால்யத்திலே அதிமேதாவியாய் ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களில் அதிஸமர்த்தராய், மயர்வற மதிநல மருளப் பெற்ற நம்மாழ்வாரைப் போல ஞானபக்தி ஸம்பந்நரா யிருக்கக்கண்டு, கேசவாசார்யர் இவருக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் தகுந்த ஆசார்யரைக் கொண்டு அதிகரிப்பித்துவைக்க வேணுமென்று நினைத்து, அப்போது பெருமாள் கோயிலில் வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்த நடாதூர் அம்மாள் திருப்பேரரான கடிகாசதம் அம்மாள் என்று ப்ரக்யாதி பெற்ற வரத விஷ்ண்வாசார்யர் ஸ்வாமி திருவடிகளில் வேதாந்தார்த்தங்களை யெல்லாம் ஸேவிக்கும்படி இவரை நியமித்தருளினர். அந்த நியமநப்படி உடனே ஸ்ரீநிவாஸாசார்யர் தம் பிதாவை வணங்கி விடை பெற்றுத் திருநாராயண புரத்தினின்று பெருமாள் கோயிலை அடைந்து, ஸ்ரீவரத விஷ்ண்வாசார்யரிடத்தில் வந்தபூர்வமாகத் தமது திருத்தகப்பனாரின் நியமநத்தை உள்ளபடி விஜ்ஞாபித்தார். அது கேட்ட ஸ்ரீ வரதவிஷ்ண்வாசார்யர் மிகுந்த ஸந்தோஷமடைந்து, இவரிடத்தில் பூர்ண கடாக்ஷத்தை வைத்து, இவருக்கு ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் பகவத் விஷயம் முதலான தர்ஶந க்ரந்தங்களையும், ஸ்ரீபாஷ்யகாரர் நாள் தொட்டுத் தமக்கு அவிச்சிந்நமாய்க் கிடைத்த ரஹஸ்யார்த்தங்களையும் ஸாங்கோபாங்கமாக ப்ரஸாதித்தார்.

இப்படி இவர் மஹாஜ்ஞாதாவாய், 'இருமுப்பொழுதேத்தி' என்கிறபடியே பஞ்சகால ப்ரவணராய் நித்யம் பேரருளாளன் திருவடிகளைத் தொழுது வருநாளில் ஒருநாள் இரவில், "சிங்கவேழ் குன்றுடையான்" என்றும், "தெய்வ மல்லால் செல்ல வொண்ணாச் சிங்கவேழ் குன்றமே" என்றும் கூறப்பட்டுள்ள மிகுந்த வைபவத்தையுடைய ஸ்ரீமத் அஹோபிலத்திற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பரம காருணிகனான லக்ஷ்மீந்ருஸிம்ஹன், தாம் செய்த க்ருஷி பலித்ததென்று இவரைப் பற்றி மகிழ்ந்து, இவர் ஸ்வப்பநத்தில் எழுந்தருளி ஸேவை ஸாதித்துத் தம்மை ஸேவிக்கும்படி செய்து, "நீர் நம் அஹோபிலத்துக்கு வாரும்; உமக்குத் துரீயாஶ்ரமம் தருகிறோம்" என்று அருளிச்செய்தார். மறுநாட் காலையில் பரமைகாந்தியான ஸ்ரீநிவாஸாசார்யர் தாம் கண்ட கனவைத் தமது ஆசார்யனிடத்தில் விண்ணப்பம் செய்யக் கேட்டு, குரு வியந்து, "இது பகவானுடைய நியமநமாகும்; நீர் அஹோபிலம் போய்வாரும்" என்று நியமித்தார். இவர் அந்த நியமநத்தைச் சிரஸா வஹித்துப் பேரருளாளனிடத்தில் விடை பெற்றுப் பெருமாள் கோயிலினின்றும் புறப்பட்டு வடநாட்டுத் திருப்பதியான

அஹோபிலம் சென்று, அங்குப் பவநாசிநியில் நீராடி அநுஷ்டாநங்களைச் செய்து, பரபரப்புடனே சிங்கவேழ் குன்றுடையான் கோயிலுக்குப் போய் அழகிய சிங்கரை அநேக ப்ரணுபூர்வமாக மங்களாசாஸநம் செய்து நிற்க, அழகிய சிங்கர் ஒரு யதிரூபியாய் இவருக்கு முன்னே எழுந்தருளி, இவருக்கு ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசித்து, அவ்விடத்தில் ராமாநுஜன் ஸந்நிதியிலிருந்த காஷாயங்களைக் கொடுத்து, 'சடகோப ஜீயர்' என்று தாஸ்ய நாமமிட்டு, தம்மிடத்திலிருந்த திருவாழி திருச் சங்குகளைத் தந்து, "நீரும் நம்மை ஆராதித்துக்கொண்டு ப்ரதி க்ராம நகரம் ஸஞ்சரித்து, ஆஶ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை-மந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதநம் பரந்யாஸம் முதலான உஜ்ஜீவநோபாயங்களைச் செய்துகொண்டு, ஆழ்வார் எம்பெருமானுர் நிகமாந்த மஹா தேசிகன் முதலானவர்களாலே ப்ரதிஷ்டாபிதமான விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி நிர்வஹித்துக்கொண்டு வாரும்" என்று நியமித்தருளினர்*. இந்த நியமநம் தான் ஸ்ரீ அஹோபில மட ஸ்தாபநத்தின் மூலசாஸநம்.

பின்பு ஸ்ரீஸ்வாமி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு ஆராதநம் செய்தருளி, அங்கு எழுந்தருளி யிருந்த த்ரிமூர்த்திகளில் பெரிய பிராட்டியாராலே அலங்க்ருதரான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் என்னும் திவ்ய மூர்த்தியை ப்ரார்த்தித்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு மிகுந்த வைபவத்துடனே ஆராதித்து வந்தார். அந்தத் திவ்ய தேசத்து ஆஸ்தாந நிர்வாஹகர்கள் இவருடைய மஹிமையைப் பார்த்து ஸந்நிதியைச் சேர்ந்த அதிகாரமனைத்தையும் இவரிடத்தில் ஸமர்ப்பித்து, தங்களை உரிய கைங்கர்யங்களில் நியமித்தருளவேண்டு மென்று ப்ராத்தித்தார்கள். ஜீயரும் அப்படியே அவர்களுக்குச் சில கைங்கர்யங்களை நியமித்துச் சிறிது காலம் அவ்விடத்தே எழுந்தருளியிருந்து, பின்னர், பாண்டிய நாட்டிலுள்ள திருநகரியில் சென்று ஆழ்வாரை ஸேவிக்கத் திருவுள்ளமாய், அழகிய சிங்கரை ஒரு திருப்பல்லக்கிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அநேக வாத்ய கோஷத்துடனும் அந்தணர் குழாங்களுடனும் கூடிப் புறப்பட்டுச் சென்றார். சென்று திருநகரியை அடைந்த பிறகு அங்கு ஆழ்வாரைக் காணுமையால் ஜீயர் மிக்க துயரத்தை அடைந்தார். அப்போது மதாந்தரஸ்தர்கள் ஆழ்வாரை ஸந்நிதியினின்றும் அப்புறப்படுத்தி ஒரு சுனையில் மறைத்துவிட்டு, அவ்விடத்தில் வேறொரு தேவதையை ஸ்தாபித்து விட்டார்கள். ஜீயர் கண்ணுங் கண்ணீருமாய் ஆழ்வாரை த்யாநித்திருக்கையில், அத்தேசாதிபதி வேட்டைக்காகத் தாம்ரபர்ணி நதிக்கரையில் வந்தவளவில், அதிதேஜிஷ்டராயிருக்கிற நம் ஜீயரைக் கண்டு அருகே சென்று ஸேவிக்க, ஜீயரும் அவனைக் கடாக்ஷித்தார். தேசாதிபதி ஜீயரிடத்தில் மிகுந்த ப்ரதிபத்தி வைத்து, 'அடியேனுக்கு

*இப்படி இந்த ஆசார்யர் ஸந்யாஸம் வஹித்தது, தமது 20-வது திருநக்ஷத்ரத்தில் என்று தெரிகிறது.

ஏதேனும் ஒரு கைங்கர்யம் க்ருபை செய்தருள வேணும்' என்று ப்ரார்த்திக்க, ஜீயரும் உகந்து ப்ரபந்நஜந கூடஸ்தரான ஆழ்வாரை அப்புறப்படுத்தியிருக்கும் வ்ருத்தாந்தத்தை அவனுக்கு உரைத்து, 'ஆழ்வாரை மீண்டும் திருப்ரதிஷ்டை செய்து நிருபத்ரவமாய் நித்யோத்ஸவங்கள் நடத்திவரக் கடவாய்' என்று நியமிக்க, அத்தேசாதிபதியும் கவலையுடன் நடந்த ஸங்கதிகளை விசாரித்து, ஆழ்வாரை மறைத்து வைத்திருக்கும் இடத்தை யறிந்து, ஸமஸ்தமான வரிசைகளுடனே ஜீயரை அழைத்துக்கொண்டு அவ்விடம் சென்று ஆழ்வாரைச் சுனையினின்றும் எழுந்தருளப்பண்ணின வளவில், ஜீயரும் மிகுந்த ஆநந்த பரிதராய் இரண்டு கைகளாலும் ஆழ்வாரை யெடுத்து மார்பில் அணைத்து, 'லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வேதம் தமிழ் செய்த நீர் நம் ஆழ்வாரன்றோ!' என்று அழைத்துக் கநகமயமான திருப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, அநேக வாத்ய கோஷத்தோடு அந்தணர்கள் வேத பாராயணமும் த்ராவிட ப்ரபந்தாநுஸந்தாநமும் செய்துவரத் திருநகரியடைந்து பூர்வம் போல் ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணினர். உடனே பாண்டிய ராஜன் ஜீயர் நியமநப்படி மண்டபாதிகளைக் கட்டி அம்மண்டபத்தின் மேற்குப் புறத்தில் ஜீயரையும் ப்ரதிமா ரூபமாக எழுந்தருளப் பண்ணுவித்து உத்ஸவாதிகளையும் நடத்தி வந்தான்.

ஒரு மஹோத்ஸவத்தில், ஜீயர் ஆழ்வாரையும் பொலிந்து நின்ற பிரானையும் மங்களாஶாஸநம் செய்தருளும்போது, ஆழ்வார், "நீர் நம்மை முன்போல ப்ரதிஷ்டாபித்து நிலை நிறுத்தினவராகையாலே, உமக்குப் பாரிதோஷிகமாக நாம் இப்போது ப்ரஸாதித்த வரிசைகளைப் பெற்று ராமாநுஜ தர்சநத்தை நிர்வஹித்து வரக்கடவீர்" என்று நியமித்து, தாம் திருக்கையிற் கொண்டிருந்த ஹம்ஸ முத்ரையை ப்ரஸாதித்து, ஆதிவண் சடகோப ஜீயர் என்ற திருநாமத்தையும் தந்தருளினர். பின்பு ஜீயர் அங்கே நம் நிகமாந்த மஹா தேசிகனைத் திருப்ரதிஷ்டை செய்து நம்மாழ்வாருடனே திருப்புறப்பாடு செய்வித்து உத்ஸவம் கண்டருளப் பண்ணினர்; முதல் தீர்த்தம், அருளிப்பாடு, திருமாலை, திருப்பரியட்டம் முதலான வரிசைகளையும் பெற்று 'ஸ்ரீ சடகோப ஸ்ரீ' என்று ஸ்ரீ முகம் முதலானவைகளில் எழுத்திடும்படியாய் நியமிக்கப் பெற்றார்.

பின்பு ஆதிவண் சடகோப ஜீயர் திருநகரியை விட்டு வடதேச யாத்ரையாய் எழுந்தருளினர். விஜயநகரத்தில் ராஜ வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தியான முகுந்த தேவராயன் என்பவன் ஜீயருடைய வைபவத்தில் ஈடுபட்டு, அவருடைய திருவடிகளை ஆஶ்ரயித்து ஸமஸ்தமான வரிசைகளையும் ஸமர்ப்பித்தான். ஜீயர் இவ்வரிசைகளைப் பெற்று ஸ்ரீ புருஷோத்தமத்திற்கு எழுந்தருளி, அவ்விடத்தில் அநேகர் தம்முடன் தர்க்கித்து ஶாஸ்த்ர வாதங்களைச் செய்ய, அவ்வாதங்களை நிரஸித்துப் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை அங்கே நிலை நிறுத்தி

னார். ஜீயர் அந்தத் திவ்ய தேசத்தில் ஆழ்வார் எம்பெருமானாருடைய ஸந்நிதிகள் இல்லாமையைக் கண்டு, அவர்களுடைய திவ்ய மங்கள விக்ரகங்களை ஏறியருளப் பண்ணித் திருப்ரதிஷ்டை செய்தார். ஜீயர் புருஷோத்தமத்தை விட்டு மீண்டு கர்நாடக ஸம்ஸ்தாநம் எழுந்தருள, அங்குள்ள ராஜாவும் அதி ப்ரீதியுடனே ஸ்வாமியை ஆதரித்து வந்தான்.

இப்படி ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு வருங்காலத்தில், ப்ரஸித்தரான மணற்பாக்கம் தோழப்பர் என்னும் ஒரு வித்வான் ஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார். ஜீயர், மஹாஜ்ஞாதாவான அவரை நோக்கி, "எல்லாரும் எளிதாக அநுஷ்டிக்கும்படி லோகோபகாரமாகச் சில தர்ம சாஸ்த்ரங்களை நீர் பண்ணவேண்டும்" என்று நியமிக்க, தோழப்பரும் அந் நியமநப்படிக்கு ஆஶௌச சதகம் முதலான எட்டு க்ரந்தங்களைச் செய்து ஜீயர் திருமுன்பே வைக்க, அவர் அவைகளைக் கடாக்ஷித்து உவந்து, இவருக்கு 'வைதிக ஸார்வபௌமர்' என்ற திருநாமம் ப்ரஸாதித்தருளினார். இப்படி எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகள் திருவம்சத்தார்களும் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளை ஆஶ்ரயித்தார்கள்.

இவ்வாறு ஜீயர், திவ்ய தேசங்கள் தோறும் ஸஞ்சாரம் செய்து கொண்டு ஸச்சிஷ்யர்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் முதலான ஸம்ப்ரதாய க்ரந்தங்களை உபதேசித்து, ஆஶ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை முதலான ஹித வியாபாரங்களால் உபகரித்து, ஆதியில் தமக்கு அழகிய சிங்கர் செய்தருளிய நியமநத்தைத் தலைக்கட்டி அறுபது சாதுர்மாஸ்யம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்தார்.

இவர் செய்தருளின கைங்கர்யங்களில் திருநகரியில் நம்மாழ்வார் திருப்ரதிஷ்டை முதலான சில கைங்கர்யங்கள் கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டன. மற்றைக் கைங்கரியங்களுக்குள் ப்ரதாநமானவை : (1) திருமலைக்கு ஸோபாநமும் (2) காஞ்சீபுரத்தில் பேரருளாளன் ஸந்நிதியின் நூற்றுக்கால் மண்டபமும், வாகன மண்டபமும், (3) அதையடுத்த தூப்புலில் நிகமாந்த மஹா தேசிகனுக்குத் தனிக்கோயிலும், (4) திருநாராயண புரத்தில் கோபுர நிர்மாணமும், தேசிகனுடைய திருப்ரதிஷ்டையும், (5) திருநகரியிலும் திருநாராயண புரத்திலும் மடங்களுமாம். திருநாராயணபுரத்தில் திருக்கல்யாணி தீரத்தில் இவர் ப்ருந்தாவநம்.

மேல் விவரித்த சரித்ரத்தினால், இந்த அஹோபிலமடம் அழகிய சிங்கர் நியமநத்தினால் ஸ்தாபிக்கப்பட்டதென்பதும், இந்த நியமநத்தின் பொருள், தம் ஆராதநத்திற்கு எழுந்தருளும் ஜீயர் தம்மை ஆராதித்துக் [illegible]ாண்டு தேசாடநம் செய்து பூர்வாசார்யர்களால் ப்ரதிஷ்டாபிதமான [illegible]ாஸ்த்ரத்தை ப்ரவசநம் பண்ணி உலகத்தைத் திருத்தி [illegible]கும், ஆஸ்திகருக்கு ஸ்பஷ்டமாய் விளங்

கும். இது, ஆதிவண் சடகோப ஜீயருடைய அநுஷ்டாநத்தை அடியொற்றி அவருக்குப் பின் அந்த ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த ஜீயர்களுடைய சரித்திரங்களாலும் ஊர்ஜிதமாகிறது.

இப்படிப்பட்ட ஆஸ்தாநத்தில் தற்காலம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான நாம்,

“யத்கடாக்ஷேண ஸம்வ்ருத்³தி⁴ யத்ஸ்தா²நாமதயோகிந꞉ ।
ஶ்ரீந்ருஸிம்ஹத³யாபாத்ரேண ஸூரி꞉ ॥”

என்கிறபடியே ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய கடாக்ஷத்திற்கும் ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய தயைக்கும் பூர்ண பாத்ரராய், முன்பொரு கால விசேஷத்தில் நம்மால் உபந்யஸிக்கப்பட்ட இந்த ஆதிவண் சடகோப மஹா தேசிகனுடைய வைபவத்தை ஸகல சிஷ்யர்களும் நன்கு உணர்ந்து உஜ்ஜீவிக்கக் கருதி, இப்பொழுது நம்மால் ஆரம்பிக்கப்பட்ட “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் இப் பத்ரிகையில் மறுபடியும் ப்ரகாசிப்பிக்கிறோம்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா லக்ஷ்மீ꞉ தத்ப்ரியஸ்தத்ப்ரிய꞉ ஶடாரி꞉ ।
ஶ்ரீஶடாரிப்ரியஸ்யாஸ்ய ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ப்ரியா ॥

ந்ருஸிம்ஹனுக்கு ப்ரியமானவள் லக்ஷ்மீ. அவள் ரங்கநாதனிடம் ப்ரீதியுள்ளவள். அவரோ சடாரியிடம் (நம்மாழ்வாரிடம்) அன்புள்ளவர். அந்த மூன்று பெயருக்கும் ப்ரியமானவள் நம்முடைய ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை. என்ன ஆச்சர்யம்! என்ன இணைப்பு! அந்த மூன்று பெயர் என்றது அந்த மூன்று திருநாமங்களுடன் விளங்கும் ‘ஸ்ரீ ரங்க சடகோப’ என்னும் மஹானைக் குறிக்கின்றதாகும்.

—வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆசார்ய மஹிமை

—

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான்]

இவ்வுலகத்தில் ஸம்ஸ்க்ருத சப்தங்கள், ஜாதி சப்தம் குண சப்தம் க்ரியா சப்தம் ஸம்ஜ்ஞா சப்தம் என்று நான்கு வகையாக மஹாபாஷ்யகாரரால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள்: ‘ஆசார்ய’ என்னும் சப்தமானது, அஜமஜ மநுஜாதிகளான சப்தங்கள் போல ஜாதியைச் சொல்லாததினால் ஜாதி சப்தமாகாது. நீலம் பீதம் மதுரம் முதலிய சப்தங்கள் போல குணவாசக சப்த மல்லாததினால் இது குண சப்சமாகாது. ப்ரக்ருதி-ப்ரத்யய-ஸமுதாயமாக இருப்பதால் இது டித்தாதி சப்தம் போல், கேவல ஸங்கேதமான ஸம்ஜ்ஞா சப்தமுமாகாது. ஆகவே உலக ப்ரஸித்தியை அநுஸரித்து, இது க்ரியா வாசகமாக இருப்பதால் க்ரியாசப்த மென்றே தீர்மானிக்கப்படுகிறது. ஆகையினாலேயே, “உபநீய து ய: ஶிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ: । ஸகல்பம் ஸரஹஸ்யம் ச தமாசார்யம் ப்ரசக்ஷதே” [மநுஸ்ம்ருதி-அத்-2. ச்லோ 140] என்கிற ஶ்லோகத்தில், சிஷ்யனுக்கு உபநயநத்தைச் செய்வித்து கல்ப சாஸ்த்ரத்தோடும் வேதாந்தங்களோடும் வேதத்தைச் சொல்லிக் கொடுக்கிறவன் ஆசார்யனென்று சொல்லப்படுகிறான் என்று இந்த ஆசார்ய சப்தமானது க்ரியா சப்தமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்ஸ்க்ருத சப்தங்களுக்கு நிருக்தம் எழுதின யாஸ்கரும், ஆசார்ய சப்தத்தை “ஆசாராந் ஆசிநோதி அர்த்தாந் ஆசிநோதி— புத்திம் வா” என்று க்ரியா சப்தமாகவே எழுதி யிருக்கிறார். இங்கு யாஸ்கர் ‘ஆசிநோதீத்யாசார்ய:’ என்கிற வ்யுத்பத்தியினால் ஆசார்ய சப்தத்திற்கு ஸம்பாதிப்பதைப் பொருளாக நினைத்துக்கொண்டு, ஸம்பாதிக்க கூடிய வஸ்துக்கள் இன்ன வென்று தெரிவிப்பதற்காக ‘ஆசாராந், அர்த்தாந் புத்திம் வா’ என்று எழுதியிருக்கிறார்.

இதனால் ‘புத்திம் வா’ என்கிற சப்தத்தினால் தர்மாநுஷ்டாநத்திற்கு அவஶ்யாபேக்ஷிதமான சாஸ்த்ர ஜ்ஞாநத்தையும், ‘ஆசாராந்’ என்பதனால் சாஸ்த்ர ஜ்ஞாநத்தின் பயனான தர்மாநுஷ்டாநத்தையும்,

'ஊடூாநு' என்பதனல் தர்மாநுஷ்டாநத்திற்கு அபேக்ஷிதங்களான த்ரவ்யங்களையும் ஸம்பாதிக்கிறவன் ஆசார்யன் என்பது யாஸ்கருடைய அபிப்ராயம். இங்கிருக்கும் 'வா' என்கிற சப்தமானது ஸமுச்சயார்த்தத்தைச் சொல்லுகிறது. விகல்பம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதல்ல. ஆகையால் சாஸ்த்ர ஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதும் தர்மங்களை அநுஷ்டிப்பதும் தனித்தனியே ஆசார்ய சப்தத்திற்கு அர்த்த மல்ல. மூன்றும் சேர்ந்து தான் ஆசார்ய சப்தத்திற்கு அர்த்தமென்று சொல்லப்பட்டதாகிறது. இந்த விஷயத்தை, "ஆசிநோதி ஹி ஶாஸ்த்ராா்தா னாசாரெ ஸ்தாபயத்யபி| ஸ்வயமாசரதே யஸ்மாதாசார்ய உச்யதெ ||" என்கிற ஸ்ம்ருதி வசநத்தில் வ்யக்தமாகக் காணலாம். இங்கிருக்கிற 'தஸ்மாத்' என்கிற சப்தமானது கீழே சொல்லப்பட்ட சாஸ்த்ர ஜ்ஞாநம் தர்மாநுஷ்டாநம் ௸ தர்மங்களுடைய ஸ்தாபநம் ஆகிய மூன்றையும் அநுவதிப்பதினல், இம் மூன்றும் சேர்ந்தே ஆசார்ய சப்தத்திற்குப் பொருளாகுமென்று வ்யக்தமாகிறது.

ஆனல் ஆசார்ய சப்தத்தை க்ரியா சப்தமாக அங்கீகரித்து ஶாஸ்த்ர ஜ்ஞாநம், தர்மாநுஷ்டாநம், தர்மஸ்தாபநம் இவைகளைச் செய்யும் மனிதரெல்லாம் ஆசார்ய சப்தத்திற்கு அர்த்தமாகலாம் என்று சொன்னல், ௸ கார்யங்களைச் செய்யும் எல்லா ஜாதி மனிதர்களும் ஆசார்யர்களாக ப்ரஸங்கிக்குமே; அப்பொழுது, கீழே சொல்லப்பட்ட மநுஸ்ம்ருதி வசநத்தில் த்விஜனுக்குமாத்ரம் ஆசார்யத்வத்தைச் சொல்லியிருப்பது விரோதிக்குமே என்று ஸம்சய முண்டாகலாம். ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷையில் ஸ்ரீ நிகமாந்த தேசிகனல் உதாஹரிக்கப்பட்ட, "த்ரிஷு வர்ணேஷு ஸம்பூத: ஶ்ரௌதஸ்மார்த க்ரியாரத:| நித்யநைமித்திக ஸ்வாத்யாய ரத:| க்ருதீயவாநீயேஷு ஸதோ தேஶிக உச்யதே ||" என்கிற ஸாத்யகி தந்த்ர வசநந்தின்படி வர்ணத்ரயமென்கிற ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யனுகிற மூன்று வர்ணத்தில் ஜனித்தவனுக்கே ஆசார்யத்வ முண்டென்று வ்யக்தமாகச் சொல்லுவதாலும், புல்லிங்கம் விவக்ஷித மாகையினுலும், மற்றை ஜாதி புருஷர்களுக்கும் எல்லா ஜாதி ஸ்த்ரீகளுக்கும் வைதிக சாஸ்த்ர ஜ்ஞாநம் அந்த தர்மாநுஷ்டாநம், அந்த தர்மஸ்தாபநம், இந்த மூன்றும் சேர்ந்ததான ஆசார்யத்வத்தில் அதிகாரமில்லை என்று ஏற்படுகிறது.

உபநிஷத்தில் சொல்லப்படும் யாஜ்ஞவல்க்ய ருஷியின் பத்நியான கார்க்கியினுடைய வேதாந்தாத்யயநம் ஸீதையின் ஸந்த்யோபாஸநம் முதலியவைகள் யுகாந்தர விஷயங்கள் என்பதை "புராகல்பே து நாரீணாம் மௌஞ்ஜீபந்தநமிஷ்யதே | அத்யாபநஞ்ச வேதாநாம் ஸாவித்ரீ வசநம் ததா" என்கிற யம ஸ்ம்ருதி வசநத்தினல் அறிந்து கொள்ளலாம். இதுநிற்க;

"தஜாஷாவாய உவு)தெ" என்கிற வசநத்தின்படி, வேதாத்ய யந ததர்த்த தர்மாநுஷ்டாந தர்மஸ்தாபந ரூபமான மூன்றும் சேர்ந்து ஆசார்ய லக்ஷணமாகச் சொல்லப்படுவதால், ஸ்த்ரீகளும் மற்றைப் புருஷர்களும், வேதாத்யயநம் மந்த்ரங்களுடைய உச்சாரணத்துடன் கூடிய தர்மாநுஷ்டாநம் இவைகளைச் செய்யாவிட்டாலும், வைதிக தர்மஸ்தாபநங்களை மேலே சொல்லப்போகிறபடி அநுஷ்டிப்பதில் விரோதமில்லை. அவரவர்களுக்கு ஶாஸ்த்ரங்கள் நிஷேதித்தவைகளைச் செய்யக்கூடாதென்பதே முக்ய தாத்பர்யம். ஆகவே, ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்ய ஜாதி புருஷர்கள் வேத சாஸ்த்ரஜ்ஞாந அநுஷ்டாந உபதேச ஸமர்த்தர்களாக இருந்தால் அவர்கள் ஆசார்ய சப்தத்திற்கு முக்யமான பொருளாக ஆகிறார்கள் என்று கீழே சொல்லப்பட்ட மநுஸ்ம்ருதி ஸாத்யகி தந்த்ர வசநங்களினால் ஏற்படுகிறபடியால், இந்த ஆசார்ய சப்தமானது ஷை அர்த்தத்தில் யோகரூடம் என்றும் கேவல யௌகிகமல்ல என்றும் நிஶ்சயிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்ட "ஆவிநோதி ஹி ஶாஜூாயஜாநு" என்கிற ஸ்ம்ருதி வசநத்தில் "ஆவிநோதீஜிதாநயஜாநு" என்று சொல்லப்படாமல் 'ஶாஜூாயஜாநு' என்று சொல்லப்பட்டிருப்பதால், அந்த சாஸ்த்ரசப்தமானது 'ஸதூ்ஃ வஐ' 'யமெஞா' 'நாநூதம் வஜெக', 'நவாஷாாநு மஜெூக' என்று விதிநிஷேத ரூபங்களான லோக ஹிதங்களான கார்யங்களை 'ஶாஜூஃ ஹி வதுூதரஃ ஶதாவிதுவஹ ஹூதஃ' என்கிறபடியே பத்துமாஸ காலம் வயிற்றுள் சுமந்து வருந்திப் பெற்றெடுத்து வளர்த்த புத்ரர்களுக்கு அநுகூல கார்யங்களை அன்புடனே தெரிவிக்கும் ஆயிரம் தந்தையரைக் காட்டிலும் அதிகமான ப்ரீதியோடு இவ்வுலகுக்கு ஹிதகார்யங்களை உபதேசிக்கும் 'வெஷாஜூாஜூஃ வாஃ நாஜி' என்று சொல்லப்படுகிற வேதரூபமான சாஸ்த்ரமும் அதனுடைய வ்யாக்யாந ரூபங்களான மஹர்ஷி வசநங்களையும் சொல்லுகிறது. இதனால்,

"புலையற மாகிநின்ற புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்ப ரோதான்"

என்கிறபடியே, சாக்கியர் சைனர் சார்வாகர் ஸாங்க்யர் சொல்லும் சாஸ்த்ரங்களை யறிந்தவர் ஆசார்யராகமாட்டார் என்று சொல்லப்பட்டதாகிறது.

இங்கு சொல்லப்படுகிற அர்த்த சப்தமானது "ஜாணாயஃ ஶாஹஃ கிஜாஹஜெயிது வெஷாஜவிஜாநாதி யொயஃ | யொஹு யவிக ஸகஃ ஹதுஜெதெ நாகஜெதி ஜூாநவியஜெதவாஜா" என்றபடியே அர்த்தஜ்ஞாந மில்லாதபடி கேவல சப்தச் சுமையை ரஸ

தாரதம்ய மறியாதே சுமந்து நிற்கையன்றிக்கே 'யொஹ்யூ_ஆவிஉ ஸகூடிம் ஸ்ஆஶ்ஷூ_டதெ' என்கிறபடியே, தனக்கும் ஸகல மங்கள ஹேதுவான தர்மாநுஷ்டாநத்திற்கு உபயுக்தமாய், சிஷ்யனுடைய அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்களுடைய நிராஸத்திற்கும் அவஶ்யாபேக்ஷிதமான வைதிக சாஸ்த்ரத்தினுடய அர்த்தஜ்ஞாநம் அவஶ்யம் வேண்டுமென்று சொல்லுகிறது. பஹுவசநத்தினல் சிஷ்யர்களுடைய அஜ்ஞாநம் ஸம்சயம் விபர்யயம் இவைகளை ஸமூலமாக உந்மூலநம் செய்வதற்கு அவஶ்யாபேக்ஷிதங்களாய் இவ்வுலகில் சுமையாக விளங்கும் அறுமூன்று கல்விகள் ஆசார்யனுக்குச் சூழவந்திருக்கவேணுமென்று சொல்லப்படுகிறது. இங்கு அறுமூன்று கல்விகள் என்பன 'அஜாநி வெடாஸூகாநொஜீரொஂஸாநூாய விஷூரஃ। வுாணஂ யஶூஸாஷூஂ வ விஷூா ஹெஷூதாஸூதுஸூஶ'' என்கிற 14-வித்யாஸ்தாநங்களும், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ சாஸ்த்ரம், அர்த்தசாஸ்த்ர மென்கிற உபவேதங்களும் சேர்ந்து 18-வித்யைகளாகின்றன. ஆனல் இப்படி அஷ்டாதச வித்யாஸ்தாநங்கள் அறிந்தவர் துர்லபராகாரோ? 'ஸகயாடவிஉயா' என்றபடியே இவ்வுலகத்தில் ப்ராயேண வித்வான்கள் ஒவ்வொரு சாஸ்த்ரம் அறிந்தவர்களாகவன்றோ காணப்படுகின்றனர்? அந்தந்த சாஸ்த்ர ஜ்ஞாநமுள்ளவர்களிடம் அந்தந்த சாஸ்த்ர ஜ்ஞாநத்தை ஒருவன் காலக்ரமத்தினல் ஸம்பாதிக்கலாமென்றால், அப்பொழுது ஆசார்ய த்யாகரூபதோஷம் ஸம்பவிக்குமே என்கிற சங்கையை 'சூ' என்கிற சப்தம் பரிஹரிக்கிறது.

இதற்கு, 'சூஸஂஜோஷிநொதி' என்கிறபடியே, 'சூ' என்கிற சப்தம் வித்யாஸ்தாநங்களைக் கற்றுணர்ந்த அநேகம் பெயர்களைக் குறிப்பிடுவதால், "லஹூஹூஃ ஶூாதவூஂ'' "ஜாநவூஜீா உயா ஈாஜநு லஹவஃ வயாஷூவாவிதாஃ'' என்கிறபடியே இவ்வாசார்யனுக்கு அபேக்ஷித சாஸ்த்ரார்த்த ஜ்ஞாநங்களை அவன் அநேகம் ஆசார்யர்களிடம் அடிபணிந்து ஸம்பாதிக்கிறான் என்று சொல்லுகிறது. இதனல், ஒருவன் தனக்கு அபேக்ஷிதங்களான சாஸ்த்ரார்த்தங்களை அறிந்துகொள்ள ஆஸ்தைப்பட்டால்,

"ஶூாதஂ ஹெஷூவஶெவ ஹமவஜூஶெஹூஷாதி ஶொகஶாஜூ விஉ। ஸொஹஂ ஹமவஶ்ஷூாவாஶி தஜூா ஹமவாநு ஶொகஸூ வாாஂ தாாயது'' என்றும்,

"காவஷூணூஷொஷொவஹதஷூஹாவஃ வூஜூாஶி கூா யஶூஸ ஜூவெஷெதாஃ'' என்றும் சொல்லுகிறபடியே தனக்கு தத்வஜ்ஞாநமில்லாமையினல் உண்டாயிருக்கும் துயரத்தை 'நன்மை தீமைகளொன்று மறியேன்' என்று தெரிவித்து, 'தஷிஜீ வூணிவாதெந வரிவூஶ்ஷூந ஸெவயா' என்கிறபடி அவ்வாசிரியனிடம் ஸாஷ்டாங்க

மாய் அடிபணிந்து சுச்ரூஷா பரிப்ரஶ்நாதிகளினால் அவைகளை அறிந்து கொள்ளவேண்டுமென்கிற சாஸ்த்ரார்த்தம் ஸூசிக்கப்பட்டதாகிறதோடு, ‘யஜ்ஞயா ஶ்ருதா ஶுஶ்ரூஷணேநாய ஸமேத வா | ஸந்த்ருக்ஷிதா வாப்யுபஸ்யாக ப்ருதம்நாயிதா ஸமேத:’’ என்கிறபடியே, முறை தவறாகக் கூட்டத்தில் கேட்டறிவதும், சுவர் மறைவிலிருந்து கேட்பதும், பத்ரிகைகளில் தானாகப் பார்த்தறிவதும், வஞ்சனையால் கேட்டறிவதும் இவைகள் முதலிய வழியல்லா வழிகளினால் சாஸ்த்ரார்த்தங்களை அறிந்தால் அந்த ஜ்ஞாநம் பயனற்றதாக ஆவதோடு விபரீத பலன்களையும் கொடுத்து விடுமென்கிற சாஸ்த்ரார்த்தமும் ஸூசிக்கப்பட்டதாகிறது.

இங்கு ஒருவன் ஜ்ஞாநஸம்பாதநத்திற்காக மற்றொரு ஆசார்யனை ஆஶ்ரயிக்கும்பொழுது முன்பு ஆஶ்ரயித்திருந்த ஆசார்யனிடம் “குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக்க னுகூலராய்” என்கிறபடியே அபசார சிந்தையில்லாது அவரிடம் பூர்ணமான பக்தியோடு அவருடைய நியமநத்தைப் பெற்று மற்றொருவரை ஆஶ்ரயிக்கவேண்டுமென்கிற விஷயம், ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி க்ரந்தத்தில் “இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில் ஆசார்யாநுஜ்ஞையாலே அபேக்ஷித ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமது சாஸ்த்ரார்த்தமென்னுமிடம் அந்திம தசாவதியாய் அக்யந்தாவஹிதராய்க்கொண்டு ஸதாசாராநுபாலநம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாரருடைய அநுஷ்டாநத்தினாலே வித்தம்” என்கிற ஸ்ரீநிகமாந்த மஹாதேசிக ஸ்ரீஸூக்தியாலே வித்தமாகிறது.

இங்குக் கீழே சொன்னபடி, ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யர்களான ஜ்ஞாநாநுஷ்டாநாதிகளையுடைய ஆசார்யர்கள் துர்லபரான காலத்தில், “ஶ்ரத்ததாநஶ்ஶுபாம் வித்யாம் ஆததீதாவராதபி” என்ற மநுஸ்ம்ருதியின்படியும், “ப்ராப்யம் ஜ்ஞாநம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத் வைஶ்யாச்சூத்ராதபி நீசாதபீக்ஷ்ணம்” என்கிற பாரத வசநத்தின்படியும், மற்றை ஜாதியார்களிடத்திலும் ஸூக்ஷ்மங்களான தர்மங்களை ஶ்ருதி ஸ்ம்ருதி புராண சப்தங்களல்லாத சப்தங்களினால் அந்தந்த வர்ண தர்மங்களுக்கு விரோதமில்லாத நியமங்களோடு உபதேசித்துக்கொள்ளலாம் என்கிற விஷயத்தையும் இந்த ‘கு’ என்கிற சப்தமே ஸூசிப்பிக்கிறது. ஆனாலும் இவ்வாசார்யனுக்கு ஸகல வைதிக சாஸ்த்ரார்த்த ஜ்ஞாநம் அவஶ்யம் ஸம்பாதிக்கவேண்டுமோ?

“ அநந்தஶாஸ்த்ரம் பஹுவேதிதவ்யம் அல்பஶ்ச காலோ பஹவஶ்ச விக்நா: | யத் ஸாரபூதம் தது பாஸிதவ்யம் ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம் ||” என்று சொல்லுகிறபடியே, ஸகல சாஸ்த்ரார்த்த ஸாரபூதங்களான ரஹஸ்யத்ரயார்த்த ஜ்ஞாந மாத்ர ஸம்பாதநத்தினாலும் ஆத்மோஜ்ஜீவநம் ஸம்பாவிதமாகையால் அதிக ஜ்ஞாந ஸம்பாதநம் வ்யர்த்தமாகாதோ? நிற்க:

"𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑌹𑍁𑌕𑍍𑌲𑍇𑌶𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌶𑍍𑌚𑌲𑌨𑌕𑌾𑌰𑌣𑌂:" என்கிற படியே அது புத்தி க்லேசத்தையும் அஸ்திர புத்தியையும் கொடுப்பதாகச் சொல்லுவதால் விபரீத பலன்களைக் கொடுக்கக்கூடிய கார்யங்களில் புத்திமான்களுக்குப் ப்ரவ்ருத்தி யுண்டாகுமோ என்ற சங்கையை இங்கிருக்கிற 'தி' என்கிற பரஸ்மைபத சப்தம் பரிஹரிக்கிறது.

ஆசார்யனுக்கு ஸகல சாஸ்த்ரார்த்தங்களினுடைய ஸாரமான ரஹஸ்யத்ரயங்களுடைய அர்த்த ஜ்ஞாநத்தினால் தன்னுடைய ஆத்மோஜ்ஜீவநம் ஸம்பாவிதமானாலும், இவ்வுலகத்தில் தன்னுடைய உபதேசத்தினால் தர்மஸ்தாபநம் செய்யவேண்டியதும் கடமையாகையால், அவ்வுபதேசத்தை ஶிஷ்யர்களுடைய அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்கள் தீரும்படி பண்ணவேண்டியதால், அதற்காக அதிக ஜ்ஞாநம் அபேக்ஷிதமாகையினால், இப்படி பரார்த்தமாக இந்த அதிக ஜ்ஞாநம் ஸம்பாதிக்கப்படவேணுமென்பதை பரஸ்மைபதமான 'தி' என்கிற சப்தம் சொல்லுகிறதென்கை மிகவும் உசிதம்.

[தொடரும்]

திதி நிர்ணயம்

மார்கழிமீ 29வ தசமி ஏகாதசி திதி த்வயம். 30வ போகி பண்டிகை, ஏகாதசி வ்ரதம்; த்வாதசி திதி. மார்கழி மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷ த்வாதசி திதியில் ச்ராத்தம் நேர்ந்தால் அதை இன்று செய்யவேண்டும். தை மாஸத்தில் க்ருஷ்ண த்வாதசி இல்லையாதலால், அந்தத் தை மாஸத்தில் நேரும் க்ருஷ்ண த்வாதசி ச்ராத்தமும் இன்றே செய்தல் வேண்டும்.

தைமீ 1வ மகர ஸங்க்ராந்தி; த்ரயோதசி திதி. இந்த மாஸத்தில் வேறு த்ரயோதசி (கிருஷ்ண பக்ஷம்) இல்லையாதலால், இன்று மாஸப் பிறப்பாக இருந்தாலும், இன்றே மகர கிருஷ்ண த்ரயோதசி ச்ராத்தத்தைச் செய்யவேண்டும். 17வ சுக்ல சதுர்தசி. 18வ அதிதி. 19வ பூர்ணிமா திதி. 22வ புதன்கிழமை த்ருதீயை சதுர்த்தி திதி த்வயம். 23வ பஞ்சமி திதி. 29வ மகர க்ருஷ்ண ஏகாதசி திதி. ஏகாதசி வ்ரதமும் இன்றே.

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஜ்ஞாந தாநம்

[ஸ்ரீ. உ.ப. அம். வ. நரஸிம்ஹாசார்யர்,
ஸ்ரீகார்யம்,* ஸ்ரீ அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்]

ஸம்பந்நபதவிந்யாஸ ஸந்தோஷாய ப்ரதாயிநீ |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பூயாஸ் ச்ரேயஸே ஸ்ரீமதஸ்ஸதா ||

உலகத்தில் தாந மென்பது மிகவும் சிரந்தது. அது 'தஸ்மாத்தாநம் பரமம்வதந்தி' என்று ஓதப்பட்டிருக்கிறது. தாநமென்பது தனக்கென்றிருக்கும் பொருளை மனப்பூர்வமாய்ப் பிறர்க்கென்றாக்குவது. மேலும் இத்தகைய தாநத்தினால் 'தாநேநாராதயோ மித்ரா பவந்தி' என்கிறபடி சத்ருக்களும் தோழர்கள் ஆகிறார்கள் என்று வேதம் தாநத்தைப் புகழ்கிறது. 'தத' என்கிற பற்றுவிட்டு, 'ந தத' என்று ஆக்கி, 'தவ' என்று சொல்லவேணுமானால் மஹா|மநஸ்கர்களாக இருக்கவேணு மன்றோ?

இந்த தாநம், ஸாத்விக ராஜஸ தாமஸ பேதத்தால் மூன்று வகைப்படும். அவற்றுள் ஸாத்விக தாநத்தை 'தாதவ்யமிதி யத்தாநம் தீயதேऽநுபகாரிணே | தேசே காலே ச பாத்ரே ச தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் |' என்று கீதாசார்யன் புகழ்ந்து அருளிச்செய்தான். இத்தகைய பெருமை வாய்ந்த தாநம் கோ ஹிரண்யம் பூ முதலிய வஸ்துக்களா பல வகைப்படுகிறது. அவ்வகைகளுள் 'ஸர்வேஷாமேவ தாநாநாம் ப்ரஹ்மதாநம் விசிஷ்யதே' என்று சொல்லியபடி ஞானதாந மென்பது மிகச் சிறந்தது. ஏனென்றால்: ஒருவனுக்கு ஞானத்தை உண்டுபண்ணுவது பசு பக்ஷ்யாதிகளைக் காட்டிலும் விலக்ஷண னென்றிருக்க முதற் காரணமாகிறது. ஞானமில்லாதவன் ஸர்வ வ்யாபாரத்திலும் பசுக்களுக்கு ஸத்ருசன் என்பது திண்ணம். மேலும் இது நிரபாயமான ஒரு நேத்ரம். குருடனுக்கு நேத்ரத்தைத் தெரியச் செய்வித்தால் அது செய்துவைப்பவனுக்கு மிகவும் ஸுக்ருத முண்டென்பது அனைவரும் அறிந்த விஷயம். இதை ஸ்துதிக்கத் தொடங்கிய தைத்தரீயோபநிஷத்தில் அநேக ரிஷிகளுடைய அபிப்ராயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதில் முதலில் ரதீதரர் எனப்படும் ரிஷியின் புதல்வர் ஸத்யத்தையே கைக்கொண்டவராதலால், அவர் ஸத்யமே எதற்கும் மேற்பட்டதென்கிறார். இரண்டாவது: புருசிஷ்டி என்னும் ரிஷியின் புத்ரர் தபஸ்ஸினால் நிறைந்தவராதலால், அவர் ஸர்வத்துக்கும் தபஸ்ஸே மேம்பட்டதென்கிறார். மூன்றாவது: மௌத்கல்யரான நாகர் என்னும் மஹர்ஷி, அத்யய

நம் பண்ணுவதும் அதை ப்ரவசநம் பண்ணுவதும்தான் ஸர்வத்திலும் உத்க்ருஷ்ட மென்கிறார். இங்கு ஸ்ருதியின் ஸ்வாரஸ்யத்தைச் சற்றுக் கவனிக்கவேண்டும். அப்பொழுது எது மேம்பட்ட தென்பது ஸ்பஷ்ட மாய் விளங்கும். ஸ்ருதி ஒவ்வொரு ரிஷியைச் சொல்லும்போது ராதீதரர் பௌருசிஷ்டி என்னும் ஒரு ரிஷியின் புதல்வராக நிரூபித்ததே தவிர அது அந்த ரிஷிகளின் பெயரைக் குறிக்கவில்லை.

இந்த ஸ்வாத்யாய ப்ரவசநங்களே மேம்பட்டனவென்று உபவாதிக்கும் ரிஷியைச் சொல்லும்போதுமட்டில் ஸ்ருதி மௌத்கல்யரான நாகரென்று ஆதரம் தோற்ற அவர் திருநாமத்தையும் சொல்லுகிறது. நாகரென்றால் பாபமில்லாதவர் என்பது பொருள். ஸத்யத்தைக் கைப்பற்றினவர், தபஸ்ஸில் நிரதர், என்று முன் சொல்லிய இரண்டு ரிஷிகளின் குணநாமத்தைக் காட்டிலும் பாபமில்லாதவர் என்னும் இந்தத் திருநாமம் மேம்பட்டதென்பது ஒருவராலும் மறுக்க முடியாது. இதனால் ஸ்வாத்யாய ப்ரவசநத்தில் (ப்ரவசநம் - ஜ்ஞாநதாநம்) தான் ஸ்ருதிக்கும் முக்ய நோக்கு என்று தெளிய விளங்குகிறது. இந்த ப்ரவசநம் ஸர்வோத்க்ருஷ்ட மென்பது ஸ்ருதியின் கருத்து. இந்த ஜ்ஞாந தாநம் மட்டில் 'கொள்ளக் குறைவிலன்' என்றது போல் கொடுக்கக் கொடுக்கக் குறைவுபடாதது. இது விலக்ஷணமாய்த் தீபத்திலிருந்து தீபம் போல் இதர தாநம்போலன்றி இருக்கும்.

இத்தகைய ஜ்ஞாந தாநத்தை, 'க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்' என்கிறபடி அருளும் ஆசார்யர்களிடத்தில், ஜ்ஞாநத்தைப் பெற்றவர்கள் ஜந்ம ஜந்மாந்தரத்திலும் க்ருதஜ்ஞதையைப் பாராட்டக் கடமைப்பட்டவர் ஆகிறார்கள். இந்த ஜ்ஞாந தாநத்திலும் வேதாந்த ஜ்ஞாந தாநம் மிகச் சிறப்புடையது. ஏனென்றால்: 'தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்' என்றல்லவோ அது புகழப்பட்டிருக்கிறது? ப்ரஹ்ம ஜ்ஞாநமே ஜ்ஞாநம். இதற்குப் புறம்பான ஶாஸ்த்ராந்தர ஜ்ஞாநம் அஜ்ஞாநமாகும் என்பது இதன் பொருள். ஆதலின் வேதாந்த ஜ்ஞாநதாநமே மிகச் சிறந்தது.

பின்னும் ஸ்ருதியே ப்ரஹ்ம ஜ்ஞாந முள்ளவனை ஸத் என்றும், அஃதில்லாதவனை அஸத் என்றும் கூறுகிறது. ப்ரஹ்ம ஜ்ஞாநம் பிறந்தவனே ஸத்தையுடையவ னாகிறான். ஸத்தை என்பதற்கு ஜீவித்திருக்கை என்பது பொருள். இப்படி ஜ்ஞாநத்தைக் கொடுத்து ரக்ஷிப்பதைப் பொருட்படுத்தியே, ['ந தேவா தண்டமாதாய ரக்ஷந்தி பஶுபாலவத் | யம் ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்த்யா ஸம்யோஜயந்தி தம் ||'] மாடு மேய்ப்பவன் மாடுகளைக் கோலெடுத்து மேய்ப்பது போலன்றி, தேவர்கள் நம்மைக் காப்பாற்ற விரும்பி நற்புத்தியைப் புகட்டி ரக்ஷிக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்மால் அநுதிநம் ஜபிக்கப்படும் காயத்ரிக்கும் இதுபோன்றதே பொருள். இதை அடியொற்றி நம் தேசிகன் சததூஷணியில் "ப்ரதிவாதிமதேபகா: ப்ரத்யவஹம் விஹிதா: ஶாஸ்த்ரமதிஷ்டா யியாயஶ்ரேயஸ்த்யம்ஜஸா ந: | கவிவிதிவிதயந்தி

[illegible] ॥''
என்று அருளிச் செய்தார். தர்ம மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படியான புத்தியை நமக்கருளிய தேவனை பகவானை நாம் உபாஸிக்கக் கடவோம் என்பது இதன் திரண்ட பொருள். தேவ தேவனைப் போலவே ஞானத்தையிட்டு நம்மை ஆசார்யர்கள் ரக்ஷிப்பது பற்றியே ஆசார்யர்களைத் தேவனைப் போல் உபாஸிக்க வேண்டும் என்று ஸ்ருதியும், ''[illegible] ......[illegible]'' என்று ஸ்ரீ தேசிகனும் விதித்தபடி.

மேலும், '[illegible]' என்கிறபடி வித்யா வம்சமும் ஒன்றுண்டு. இதற்கு ஜ்ஞாந தாநம் ஸம்பந்தம். இந்த ஸம்பந்தம் எவ்வித ஆஸ்ரமிகளாலும் ஒழிக்க ஒழியாதது. அதனால் ஜந்ம ப்ரயுக்த ஸம்பந்தத்தைக் காட்டிலும் ஜ்ஞாந ஸம்பந்தம் சிறந்தது. இவ் வாசார்யர்கள் நமது அஜ்ஞாநத்தைப் போக்குவதால் குரு என்று பெயர் பூண்டார்கள். ['[illegible] ॥'] '[illegible]' என்றால் அஜ்ஞாநம்; '[illegible]' என்றால் அதைப் போக்கடித்தல்; அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குவதால் அவர்கள் குருக்கள் எனப்படுகிறார்கள். இதில் ஆத்ய குருவானவர் பகவானே. ''[illegible]'' என்றல்லவோ கீதையில் சொல்லப்பட்டது? இது ஔபசாரிகமில்லாமல் ஜ்ஞாநபீடமான நமது அஹோபில மடத்தில் ஆராத்யராய் ஆசார்யகமும் செய்துவரும் நம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே ஆத்ய குரு என்பது நிச்சயம். ஆதலாலன்றோ ஸ்ரீந்ருஸிம்ஹன் விஷயத்தில் ''எம் வானவ ரேற்றையேயன்றி மற்றொருவரை யானிலேன் எழுமைக்குமே'' என்று ஆழ்வார் ஈடுபட்டார். இங்கு வானவர் என்பது தேவரை விவக்ஷித்தலும் அழகு.

இப்படி ஆத்ய குருவான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், பக்தாக்ரேஸராயும் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸேவதியான ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனை ஜகதுஜ்ஜீவநார்த்தமாய் அத்யாத்ம ப்ரவசநம் செய்துவரும்படி நியமித்தருளினர். அந்த மஹா தேசிகனும் பகவந் நியமநத்திற் கிணங்கித் தமது ஸுகத்தைச் சிறிதும் கருதாது ஆங்காங்கு எழுந்தருளி, ஸதாசார்ய க்ரந்தங்களையும் ஸம்ப்ரதாயங்களையும் பரவச் செய்தருளினர். ''உரைக்கின்ற பாஷ்யத்தை உம்பர் தொழ வெப்பொழுதும்'' என்றும், ''ரஹஸ்ய த்ரயஸாரத்தின் ரஸமுரைப்போன்'' என்றும் சொல்லுகிறபடி இம்மஹானின் அழகிய ப்ரவசநத்திற் கிணங்கி இம்மஹா தேசிகனை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் ஏகமுகமாய் ஆஸ்ரயித்து உஜ்ஜீவித்தார்கள்.

இப்படி ஒராண் வழியாக இம்மஹானுக்குப் பிறகு இந்த ஜ்ஞாந பீடத்தில் ஆசார்ய பரம்பரை வந்து ஜ்ஞாந ப்ரதாநம் நடந்து கொண்டு வருகிறது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அழகிய சிங்கருடைய பட்டாபிஷேக வ்ருத்தாந்தம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனால், சுக்ல௵ சித்திரை௴ 22௳ ௸ மடத்தின் 42-வது ஆஸ்தாந நிர்வாஹத்திற்காகத் தாமே ப்ரத்யக்ஷமாகவும் சாஸந பத்ர மூலமாகவும் நியமிக்கப்பட்டு, வைராக்ய பூர்வமாக அவ்வழகிய சிங்கரிடமே சாஸ்த்ரீயமாக ஸந்யாஸாஶ்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு, அவ்வழகிய சிங்கருடைய நியமநப்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அபிகமநாராதநம் பஞ்சஸம்ஸ்காரம் முதலிய கைங்கர்யங்களைச் செய்துகொண்டுவந்து, நாளது வ்ருஷ௵ ஐப்பசி௴ 9௳ ௸ 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் திருநாட்டுக்கு எழுந்தருளின பிறகு ௸ காலம் தொடங்கி ௸ மடத்தின் லௌகிக வைதிக ஸகல நிர்வாஹங்களையும் ஸம்பூர்ணமாகப் பெற்று, ௸ மடத்தின் 42-வது ஆஸ்தாந நிர்வாஹங்களை க்ரமமாக நடத்திவரும் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் தமது பட்டாபிஷேக தினத்தில் அதிக ஸந்தோஷ ஸம்பூர்ணர்களான அளவிறந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தின் நடுவில் சில ஸந்தோஷ வார்த்தைகளை அருளிச் செய்ய நினைத்து, ஸந்தோஷ கோலாஹல சப்தங்கள் அதிகமாயிருந்ததால், மற்றொரு தினம் ௸ திவ்யாஸ்தாந கோஷ்டியில் லோக ஹிதங்களான அந்த வார்த்தைகளை அருளிச் செய்தார். அவை பின் வருவன:

ஸ்ரீ அழகிய சிங்கர் அருளிய பொன்மொழிகள்

1. நம் ஸம்ப்ரதாயஸ்தர்களான சிறுவர்களின் க்ஷேமத்தை உத்தேசித்து, வேத பாடசாலையும் சாஸ்த்ர பாடசாலையும் ஸ்தாபித்து நடத்துவதாக நிச்சயித்திருக்கிறோம்.

2. வருஷத்துக்கு ஒரு முறையேனும் நமது ஸம்ப்ரதாயஸ்தர்களான வித்வான்களுடைய ஸபையைக் கூட்டி, அவர்களுடைய ஞானபிவ்ருத்தியில் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுதல்.

3. உத்தர தேசத்தில் கங்கா தீரத்தில் ப்ரயாகை முதலிய இடங்களில் அஹோபில மடங்களை ஏற்படுத்தி, அவற்றில் வித்வான்களை நியமித்து, அவர்கள் மூலமாக அங்கிருக்கும் ஜனங்களுக்கு ஆஸ்திக்யத்தையும் தத்வஞானத்தையும் உண்டு பண்ணுதல்.

4. ருக்வேதிகளாயும் ஸாம வேதிகளாயும் உள்ள ஸந்நிதி சிஷ்யர்களுக்கு அந்தந்த ஶாகையின்படி ஆந்ஹிகங்களை எழுதி அச்சிட்டு ப்ரசுரம் செய்தல். அன்றியும் தத்காலம் நம்மால் எழுதப்பட்டுவரும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார வ்யாக்யானத்தைச் சீக்ரத்தில் எழுதி முடித்து அச்சிட்டு ப்ரசுரம் செய்தல்.

5. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்ய வ்ருத்தியை உத்தேசித்து "ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் திருநாமம் பூண்ட ஒரு மாதப் பத்ரிகையை ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே கூடிய சீக்ரத்தில் ஆரம்பித்து நடத்தல்.

6. நமது தேசத்தில் எல்லாவிடங்களிலும் நாஸ்திக்யம் குறைந்து, ஆஸ்திக்யம் வ்ருத்தியடைந்து, அவரவர்கள் ஸ்வதர்மங்களை அநுஷ்டித்து வருவதற்காக வைதிகர்களான வித்வான்களை ஆங்காங்கு அனுப்பி ப்ரவசநம் செய்தல். இவை முதலான நற்கார்யங்களை நடத்தவேண்டுமென்பது நமது நிச்சயம்.

மேற்குறித்த எல்லாக் கார்யங்களையும் குறைவின்றி நடத்தி ஸம்ரக்ஷித்து வருவதற்காக, புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யரை நமக்கு மந்த்ரி ஸ்தானத்தில் இருக்கும்படி நியமித்திருக்கிறோம். அவர் ஷை கார்யங்களையெல்லாம் நன்றாகக் கவனித்து நிறைவேற்றிவைக்க ஸாமர்த்ய முள்ளவரென்பதை, அவருடன் சிரகால பரிசயத்தினாலேயே நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நமது மநோரதங்களையெல்லாம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தலைக்கட்டியருளவேணுமென்று அவனையே ப்ரார்த்திக்கிறோம்.

மேலும்: ஸ்ரீ அஹோபில மடத்தைச் சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றும் ஆஸ்திகர்களான ப்ரபுக்களும் இந்தத் தர்ம கார்யங்களில் தங்கள் சக்திக்கு அநுகுணமாக அந்வயித்து, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தைப் பெற்று, ஸர்வக்ஷேமங்களுடன் வாழ்ந்திருக்க வேணுமென்பதும் நமது மநோரதமென்று அருளிச்செய்தார்.

ஸ்ரீ அழகிய சிங்கர் அருளிச்செய்த இவ்விஷயங்களைக் கேட்டு அதிகமான ஆநந்தத்தை அடைந்திருந்த சிஷ்யஸமூஹத்தின் சார்பாக ஸ்ரீ. உ. வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஷை விஷயத்தில் அங்கு வந்திருந்த மஹாஜநங்களுடைய ஸந்தோஷத்தைத் தெரிவித்து, நமது மதாசார விஷயமாக ஸ்ரீ அழகிய சிங்கர் அருளிச்செய்த விஷயங்களெல்லாம் விசேஷ சிறப்புடன் சீக்ரத்தில் நடைபெறும்படி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தார். பிறகு ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி, ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயமாகச்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

...ஸ்லோகங்களைப் படித்து, அவற்றின் பொருளைத் தெளிவாகவும் ...ழகாகவும் உபந்யஸித்தார். அந்த ஸ்லோகங்கள் பின்வருமாறு:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

இவற்றைக் கேட்டு அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் மிக்க ஆநந்த மடைந்தனர்.

ஸ்ரீ :

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

210099

பாசுரங்களின் பகுதி

[ஸ்ரீ விஷ்ணு தாஸன்]

தாயே தந்தை யென்றும் தாரமே கிளேமக்க ளென்றும்
நோயே பட்டொழிந்தே னுன்னைக் காண்பதோ ராசையினல்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்திரு வேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கி யாளென்னைக் கொண்டருளே.

[பெரிய திருமொழி I—9.]

பந்துக்க ளல்லாதாரைப் பந்துக்களென்று நினைத்திருந்தேன் ; அக்குற்றத்தைப் பொறுத்தருள வேணுமென்று சரணம் புகுகிருர்.

பதவுரை

வேய் ஏய் - மூங்கில்கள் நெருங்கி யிருக்கப்பெற்றதும்
பூ விரை ஆர் - புஷ்பித்துப் பரிமளம் மிக்கிருப்பதுமான
பொழில் சூழ் - சோலையாலே சூழப்பட்டிருக்கிற
திருவேங்கடவா - ஸ்ரீ வேங்கடாத்ரியை நிருபகமாக உடையவனே !
தாயே என்றும் - தாயல்லாதாளைத் தாயென்றும்
தந்தை யென்றும் - தந்தையல்லாதானைத் தந்தையென்றும்
தாரமே யென்றும் - மனையாளல்லாதவளை மனையாளென்றும்
கிளேயே யென்றும் - பந்துவல்லாதவரைப் பந்துவென்றும்
மக்களே யென்றும் - மக்களல்லாதவரை மக்களென்றும் (மாருக நினைத்து)
நோயேபட்டு ஒழிந்தேன் - அநர்த்தப்பட்டுப் போந்தேன்.
நாயேன் - நாய்போல மிக்க நீசனை அடியேன்
உன்னை - நிருபாதிக ஸர்வ வித பந்துவான தேவரீரை
காண்பது ஓர் ஆசையினல் - தரிசிக்கவேணு மென்கிற ஓர் ஆசையாலே
வந்து அடைந்தேன் - வந்து சரணம் புகுந்தேன்.
என்னை நல்கி - என்னை க்ருபை செய்து
ஆள் கொண்டு அருள் - அடிமை கொண்டருள வேணும்.

தாயே—இதில் ஏகாரம் பிரிநிலைப் பொருளில் தாயல்லாதாளைத் தாயே என்றிருந்தே னென்னும் தாத்பர்யத்தைக் கொடுக்கின்றது. இதுவே எல்லாப் பதங்களிலும் தொடர்ந்து வருகிறபடியால் ஒருவருக்கும் நிருபாதிகமான ஸம்பந்தமில்லை என்று பலிக்கிறது.

“ மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண: ” [நாராயணனே மாதா முதலான பந்து; அவனே கதி] ஸுபாலோபநிஷத்

" 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌪𑌿𑌤𑌾 𑌚 𑌮𑌮 𑌰𑌾𑌘𑌵𑌃 "
[ஸ்ரீ ராமனே எனக்கு ஸகலவித பந்து] —ஸ்ரீமத் ராமாயணம்.

என்கிறபடியே திருவேங்கடவனே நிருபாதிக ஸர்வவித பந்து.

நோயே பட்டு—இவர்களெல்லாரும் கர்மோபாதிக பந்துக்கள் மாத்ரமே. அவர்கள் நமது கர்மத்திற்கு அநுகுணமாக ப்ரதிகூலராகவும் நடப்பார்கள். பலியிடக் கொடுத்தும் விற்றும் ஜீவிக்குமவர்களுமுண்டு. ஆகையால் அவர்களால் நோய்படவும் நேரும். அவர்களின் அபசாரத்தால் நோய்படுவதன்றிக்கே அவர்கள் ஸ்வரூபமே நோய்க்கு நிதாநம் என்பது கருத்து.

ஒழிந்தேன்—விட்டேன். பகவானை அறிவதற்கு ஸதாசார்யோபதேசமும் சாஸ்த்ரமும் வேண்டும்; இவர்களை விடுவதற்கு ஆசார்யோபதேசம் வேண்டுவதில்லை. இவைகளே ஆசார்யர்களாக வாயிற்றுவிட்டன.

பூம்பொழில்—'𑌸𑌵𑌾𑌸𑌨𑌃' என்கிற வஸ்து உள்ளே நிற்கிறதென்று தோற்றும்படியாயிற்று. அப்பரிமளம் வழிகாட்ட வந்தேனென்றும் ஸ்புரிக்கின்றது.

வேங்கடவா—பரமபதத்தில் நித்ய ஸூரிகளுக்கு ஓலக்கம் கொடுத்திருக்குமவன், ப்ரஜை விழுந்த கிணற்றில் ஒக்க விழுந்தெடுக்கும் தாயைப்போல,இவை நோவுபடுகிற ஸம்ஸாரத்தில் இவைகளை ரக்ஷிக்கும்பொருட்டு வந்து கிடக்கிறானன்றோ?

நாயேன்—நான் செய்துகொண்டபடியைப் பார்த்தால் பிறர்க்குமாகேன், தேவர்க்குமாகேன்; புறம்பே போகில் கல்லையிட்டெறிவார்கள்; உள்ளேபுகில் தொட்டனவும் பரம்பரா ஸ்பர்ச முள்ளனவும் பொகட வேண்டி வரும் என்று தோற்றுகிறது.

ஆள் கொண்டு அருளே—நித்ய ஸூரிகளைக் கொள்ளு மடிமை என்னைக் கொண்டருளவேணும்.

இப்பத்தில் பாட்டுத்தோறும் 'வந்தடைந்தேன்' என்கைக்குத் தாத்பர்யத்தை ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார். "ஸூகுமாரரா யிருக்குமவர்கள் விடாய்த்தால் பலகாலும் முகத்திலே நீரையள்ளி யேறிட்டுக்கொள்ளுமா போலே பலகாலும் ப்ரபத்தி பண்ணும்படியாயிற்று இவருடைய மார்த்தவ மிருப்பது. ஒருகால் பெற்றிலோமென்று கை வாங்குமளவன்றிக்கே பெற்ற வளவும் ப்ரபத்தி பண்ணுவாராயிற்று 'நிபபாத விபீஷணஃ' என்று விபீஷணன் அவன் திருவடிகளிலே விழுந்து சரணம் புக்காற் போலேயாயிற்று." 'பபாத' என்னாதே, 'நிபபாத' என்றத்தால் பலகால் சரணம் புக்கான் என்று கருத்து.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

“ ந்ருஸிஹ்ம ப்ரியா ” எனும் பத்ரிகையின் பெயர்க் காரணம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்]

இந்தப் பத்ரிகையின் மூலமாக வெளியிடப்போகிற வைதிக தர்மங்கள் எல்லாம் ‘ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா’ என்கிறபடியே! ஸர்வேஶ்வரனுக்கு மிகவும் அபிமதங்கள், ஸ்ரீ கீதாசார்யன் ‘ந ச தஸ்மாந் மநுஷ்யேஷு கஶ்சிந் மே ப்ரியக்ருத்தம:’ என்று அருளிச்செய்தபடி இந்தப் பத்ரிகையின் மூலமாக உலகத்திற்கு ஸம்பவிக்கக்கூடிய ஞான விகாஸத்தைக் காட்டிலும் ஸர்வேஶ்வரனுக்கு ப்ரியதமமான காரியங்கள் மற்றொன்று இல்லையென்று அருளிச்செய்கிறார். இவ்வாறு அருளிச்செய்த ஈச்வரன் நம் ஸ்ரீ அழகிய சிங்கரால் இவ்வாஸ்தானத்தில் நரஸிம்ம ரூபியாய் ஆராதிக்கப்படுகிறான். ஸர்வேஶ்வரனுடைய ராம க்ருஷ்ணாதி அவதாரங்களின் பஹிமைகளை மொழிந்திடும் ராமாயண பாரதாதி க்ரந்தங்கள் அந்த ராம க்ருஷ்ணாதி அவதார விஷயத்தில் ஈஶ்வரத்தன்மைக்குப் பொருந்ாதவைகளான கர்ப்பவாஸம், ஆஹாரபோஜனம், உபநயநாதி ஸம்ஸ்காரம், ஆசார்ய சுச்ரூஷை, பத்நீ பரிக்ரக ப்ரயத்நம், பந்துவியோக யோகம், முதலிய ஸம்ஸாரி சேதநர்களுடைய ஸர்வ தோஷங்களையும் பரக்க நிரூபிப்பதோடு, அதே க்ரந்தங்களில் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதார விஷயத்தில் அந்தத் தோஷங்களின் ப்ரஸங்கத்தைத் தெரிவிக்காததோடு, ஸர்வேஶ்வர ஸ்வபாவத்துக்குப் பொருந்தினதான குணாநந்தியங்களை சொல்லும் ப்ரகரணத்தில் ஆஶ்ரித ஸம்ரக்ஷணரூப மஹாகுணத்தை “ப்ரஹ்லாதம் ஸகலாபத்ப்யோ யதா ரக்ஷிதவாந் ஹரி: |” என்கிற விஷ்ணு புராண வசநத்தின்படியே அச்சிங்கப் பிரானை ஆஶ்ரயித்திருந்த பரமபக்தனான ப்ரஹ்லாதாழ்வானுடைய எண்ணிறந்த துக்க பரம்பரைகளை யெல்லாம் ஸவாஸநமாகப் போக்கடித்ததோடு, “விரக்தம் வஸ்த்ராந்நாதிஷு பயேநைவ ஸ்வபாவத: |” என்கிறபடியே வைராக்யாதிசயத்தினால் விஷய போகங்களை வெறுத்திருக்கும் ப்ரஹ்லாதாழ்வானுக்கு அவ் விஷயங்களை ஸாதுக்களாக்கித் ததியபர்யந்தமாகத்தானே நிர்ப்பந்தித்துக் கொடுத்து, அவன் அநுபவிப்பதைக் கண்ணாரக் கண்டு ‘ப்ரீதோऽபவத்’ என்கிறபடியே உகந்திருப்பதாகிற அவ்வாஶ்ரித ரக்ஷணரூபமான உத்தமகுண விசேஷம் இந்த ந்ருஸிம்ஹாவதாரத்திலேயே நிறம்பெற்று நிறைந்திருப்பதாக ஓலைப்புறத்தில் எழுதிவைத்த கதையாகக் கேட்டு ‘ஹா ஹந்த ஹந்த’ என்கிற ஶ்லோகத்தின்படியே வயிறெரிந்து

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

நிற்கையன்றிக்கே, அவ்விபவாவதாரத்தைக் காட்டிலும் சிறந்ததான அச்சிங்கப்பிரா னுடைய அர்ச்சாவதார ரூபமான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனிடத்திலும் இவ்வாஶ்ரித ஸம்ரக்ஷணமாகிற மஹாகுணம் அதிகமாக நிறைந்து நிரம்பெற்று விளங்கியிருப் பதை இந்த ப்ரஹ்லாதாழ்வானைப்போல் அத்யந்த பக்தரான நம் அழகிய சிங்க ரிடத்திலும் ஸர்வமநுஷ்ய ஸாதாரணங்களான தாபத்ரய துக்கானுபவங்கள் ஒருபுற மிருக்க, அப்ரஹ்லாதாழ்வான் பற்பல துன்பங்களை அஸாதாரணமாய் அநுபவித்தது போல இங்கும், ‘ ஸவ்யாதிராயிரவி தூஷிரஸிஷு யோமஹஸ்ஸ்வெஷு வி- யோஜநேஷ்வேஷு கரோ நிகஷு: ’ என்கிறபடியே எண்ணிறந்த துக்கபரம் பரைகளில் குறைவின்றி ஸம்பூர்ணங்களாக ஸம்பவித்த ஸர்வப்ரகார துக்கங்களை யெல்லாம் ஸ்ரீ அழகிய சிங்கர் நிரந்தரமாய் அநுபவிக்கும் காலங்களிலும், ‘ தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை ’ ‘ களைவாய் துன்பம் களை யாதொழிவாய் களைகண் மற்றிலேன் ’ என்கிற பாசுரங்களின்படியே தனது அநந்ய சரணத்வாவஸ்தையோடு அச்சிங்கப்பிரான் கழல்களவையே சரணகப் பற்றி ‘ நின்னருளே புரிந்திருந்தேன் ’ என்று நிற்கிற அவ்வவஸ்தையைக் கண்ணாரக் கண்ட ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீ அழகிய சிங்கருடைய அவ்வவஸ்தைக்கு மிகவும் உகந்து, அவருடைய துக்க பரம்பரைகளை ஸவாஸநமாக அடியறுத்து, வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல ’ என்கிறபடியே தனது ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ஸம்பூர்ணமாக அநுபவிக்கச் செய்து, அவ்வநுபவஜநித ப்ரீதியானது உள்ளடங்காமல் வாகாதி ரூபங்களாலே பொங்கி வழிந்த கைங்கர்யங்களை எல்லாம் ஒழிவில் காலத்திற்படியே இவ்வுலகத்திலேயே ஸம்பூர்ணமாகத் தந்தருளி, ‘ இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென் ’ என்றும், ‘ இச்சுவை தவிர யான் போய் ’ என்றும், அவர் தாமே பாசுரமிட்டுப் பாடித் திரியும்படி செய்திருப்பதால், கீழே சொல்லப்பட்ட ஆஶ்ரித ஸம்ரக்ஷணமாகிற மஹாகுணம் இவ்வர்ச்சாவதாரமான ந்ருஸிம்ஹனிடத்தில் மிகவும் அழகியதாய்க் காணப்படுவதாலும், அவ்வழகியசிங்கருடைய நெஞ்சமே நீணகராக இருந்த அச்சிங்கப்பிரான் லோகோபகாரார்த்தமாக ஸ்ரீ அழகிய சிங்கரைக் கொண்டு இப்பத்ரிகையை இவ்வுலகத்தில் பரவச் செய்யும்படி நியமித்து நடத்தி வருவதால், இது அவனுக்கு ‘ ஶ்லோகார்த்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்த கோடிபி: | பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் || ’ என்கிற படியே மிகவும் ப்ரியமான காரியமானபடியினால் இதற்கு “ ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ” என்று திருநாமம் வைத்தது மிகவும் உசிதமாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆஸ்திக்யம்

[வேதாந்த சிரோமணி தோட்டாலம் ஸ்ரீ. வேணுகோபாலாசார்யர்]

உலகத்தில் பொதுவில் ஜனங்கள் ஆஸ்திகர்கள் என்றும் நாஸ்திகர்களென்றும் இருவகைப்பட்டிருப்பர். [அஸ்தி-உண்டு.] பரலோகமுண்டு, தேஹத்தைக் காட்டிலும், விலக்ஷணமான ஆத்மாக்கள் உண்டு, அவர்களை அடக்கி ஆள்கின்ற ஈசுவரன் ஒருவன் உண்டு, பரம புருஷார்த்தமெனப்படும் மோக்ஷமென்பதுண்டு, அதை யடையவேண்டிய வழி முதலியவற்றைத் தெரிவிக்கக்கூடிய வேதமென்பது உண்டு என்று அங்கிகரிப்பவர்கள் ஆஸ்திகர்கள். இவைகளை மறுகின்றவர்களே நாஸ்திகர்களாகிறார்கள்.

அவற்றில் பரலோகம் — இது ஸ்வர்க்கம் என்றும் நரகம் என்றும் இருவகையானது. இவை முறையே சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டும் நிஷேதிக்கப்பட்டுமிருக்கிற ஸுக்ருதம் துஷ்க்ருதம் என்ற புண்ய கர்மங்களாலும் பாபகர்மங்களாலும் அடையக்கூடியவைகளாயிருக்கும்.

ஆத்மாவாவது — என்னுடைய சரீரம், என்னுடைய கண், என்னுடைய மநஸ், நான் அறிகிறேன், நான் செய்கிறேன், நான் ஸுகி, நான் துக்கி — இத்யாதியான அநுபவங்களால் தேஹவிலக்ஷணனாயும் இந்த்ரியங்களைவிட வேறுபட்டும், அணுவாயும் ஜ்ஞாதாவாயும் கர்த்தாவாயும் போக்தாவாயும் இருக்கும் ஒரு ஸ்வயம் ப்ரகாசமான வஸ்து. இவ்வாத்மாவுக்கு அடியிலே ஈச்வரன் ஜ்ஞானத்தையும் சக்தியையும் கொடுத்து ஹிதாஹிதங்களை யறிந்து நடந்துகொள்ள வல்லனாம்படி இவனை நியமித்து வைக்கையால், இவன் எப்பொழுதும் அவன் இட்ட வழக்காக இருக்கவேண்டியதுடன் அவனுடைய ஆஜ்ஞாரூபங்களான விதி நிஷேத சாஸ்த்ரங்களுக்கு வச்யனாயிருப்பன்.

ஈச்வரனாவது — சேதநாசேதநங்கள் எல்லாவற்றிற்கும் நித்யமாக தாரகனாய் (அதாவது: அவைகளின் நிலைத்திருத்தலுக்கு ஆதாரமாய்) நியந்தாவுமாய், அவைகளுக்கு நிருபாதிகமாக நித்ய சேஷியுமாய், ஸர்வ கார்யவர்க்கத்திற்கும் ஸர்வவித காரணமாய், ஒருவிதத்தாலும் ஒருவித ஹேய (தோஷ) ஸம்பந்தமற்றவனாய், ஸ்வத: ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தனாய், ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கு மிருப்பிடமாய், உபய விபூதிநாதனாய், ஸர்வவித சாஸ்த்ரீய கர்மங்களாலும் ஆராதிக்கப்படுவனாய், அவைகளுக்கு ஏற்பட்ட பலன்களைக் கொடுக்குமவனாய், முமுக்ஷுக்களுக்கு ஆச்ரயணீயனாய், முக்தர்களுக்கு ப்ராப்யனாய், எங்கும் நிறைந்து நிற்கும் ச்ரிய:பதியான புருஷோத்தமன். இவனுக்கு அப்ராக்ருதமாயும் தனக்கே அஸாதாரணமாயுமுள்ள திவ்யமங்கள விக்ரஹயோகமும் இவனுடைய திவ்யலீலைகளும் உண்மையானவை. ஆச்ரித ரக்ஷணத்திற்காகவும் அவர்களின் விரோதிகளை நிரஸிப்பதற்காகவும் உலகத்தில் அவன் ராமக்ருஷ்ணாதி ரூபத்துடன் அவதரிக்கிறான்.

மோக்ஷமாவது — இப்படி ஸம்ஸரிக்கும் ஜீவன்களுக்கு யாத்ருச்சிகமாயும் ப்ராஸங்கிகமாயுமுள்ள ஸுக்ருதமடியாகப் பிறந்த பகவத்கடாக்ஷ விசேஷாதீநமாயுண்டான ஓர் உபாய விசேஷத்தாலே நிச்சேஷமாக ஸம்ஸார நிவிருத்திபிறந்து அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபதம் சென்று, அங்குண்டாகியுள்ள பரிபூர்ண பகவதநுபவமும் அதற்குப் போக்குவீடாகப் பிறக்கும் ஸ்வாமி யுகந்த சேஷவ்ருத்தியாகிற நாநாவித கைங்கர்யாநுபவமுமாகும்.

வேதமாவது — ஒரு புருஷனாலோ அல்லது பலபேர்களாலோ ஸ்வதந்த்ரமாகவோ அல்லது பரதந்த்ரமாகவோ செய்யப்பட்ட நூல்கள்போல் அல்லாமல், அநாதிகாலமாக இதின் உச்சாரணக்ரமம் எக்காலத்திலும் ஒருவிதமான புருஷபுத்திக்கு மிணங்காமல், பூர்வ பூர்வ புருஷர்களின் உச்சாரணக்ரமத்தை யநுஸரித்து அத்யயந பரம்பரையாய் ஸாவதாநமாகக் காப்பாற்றப்பட்டுவரும் அநாதியான சப்தராசியாகும்.

இது சேதந வர்க்கங்கள் திநந்தோறும் நடந்துகொள்ளவேண்டிய முறைகளையும், அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களையும், விலக்கவேண்டிய கார்யங்களையும், அவ்வோ அதிகாரிகளின் மநோபாவத்திற்குத் தக்கபடி அவரவர்கள் வேண்டுகின்ற புருஷார்த்தங்களை யடையக்கூடிய உபாயங்களையும், தன் ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்த அதிகாரி அபேக்ஷிக்கக்கூடிய பரம புருஷார்த்தமாகிற மோக்ஷஸ்வரூபத்தையும், அங்கு சென்று அநுபவிக்கக்கூடிய பகவானையும் அவனுடைய கல்யாண குணங்களையும், அவ்வநுபவத்தைப் பெறுவதற்கு உபாயங்களான பக்திப்ரபத்திகளின் அங்கங்களையும் நன்கு எடுத்து விசதமாகக் காட்டுகின்றது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஆஸ்திகர்களின் மதத்தில் ஜகத்த அநாதி. அப்படியே ஈஸ்வரன் அநாதி. சேதந கோடிகளும் அநாதியானவர்கள். இவர்களின் அநாதியான ஆஜ்ஞாதிலங்கந மடியாகப் பிறந்த புண்யபாபரூபமான கர்ம ப்ரவாஹமும் அநாதி. இப்படி அநாதியான சேதநவர்களை ஆள்கின்ற ஈஸ்வரனும் ஆளப்படும் சேதநர்களும் அநாதியென்றால் அவர்களையாளும் முறையைத் தெரிவிக்கும் வேதமும் அநாதியாகவல்லவோ இருத்தல் வேண்டும். ஆக இத்தால் வேதம் அநாதி என்றது நிஸ்சிதமாயிற்று.

வேதம் அபௌருஷேயம். சப்தம் பொதுவில் ஒரு புருஷனால் ஸ்வதந்த்ரமாகச் செய்யப்பட்டது என்றும் அப்படியல்லாதது என்றும் இரண்டு விதமாயிருக்கும் முதலில் சொல்லியது லௌகிக வாக்யம். இதன் உச்சாரணக்ரமம் புருஷ புத்திக்கு ஸ்வாதீநமாயிருப்பதால் இதைப் பௌருஷேய மென்பர். புருஷ புத்திக்கு அதீனமாக நிர்மாணிக்கப்பெற்றது பௌருஷேயம். இரண்டாவதுதான் வேதம். இதன் உச்சாரணக்ரமம் புருஷனுடைய ஒருவிதமான இச்சைக்குமிணங்காமல் முன் முன் புருஷர்களின் உச்சாரண க்ரமத்தை யநுஸரித்து அத்யயந பரம்பரையில் ஸாவதாநமாய்ப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ப்ரளயத்திற்குப் பின்னும் முன்னிருந்த ரீதியிலேயே பகவான் நாராயணன் ப்ரஹ்மதேவனுக்கு உபதேசிக்க, அவர் மற்றவர்களுக்கும் உபதேசிக்க, இப்படி ஒவ்வொரு ப்ரளய காலத்திலும் முன்னிருந்த ரீதி குலையாமல் உபதேசிக்கப்பட்டு வருவதால், ஒருவிதத்தாலும் வேதத்தில் லௌகிக சப்தத்தில் போல் எவ்விதமான புருஷனுக்கும் எவ்விதத்திலும் ஸ்வாதந்த்ர்யம் இல்லை. ஆகையால்தான் வேதத்தை அபௌருஷேய மென்றார்கள். வேதத்தை நித்யமென்றது, அதன் ஆநுபூர்வியில் எக்காலத்திலும் யாதொரு விதத்தாலும் மாறுதலில்லாமலும் என்றைக்கும் ஏகரூபமாக இருப்பதாலுமாகும். ஆகையால் வேதத்தின் அக்ஷரங்கள் அநித்யமானாலும் வேதம் நித்யம் எனக் குறையில்லை.

வேதம் ஸ்வத: ப்ரமாணம் — மனிதன் ஒருவித ப்ரமாணத்தைக் கொண்டு லௌகிக விஷயங்களைத் தெரிந்து, அதை அயலாருக்குத் தெரிவிக்க வேண்டி, அதற்கு வாசகமான சப்தத்தை ப்ரயோகிக்கிறான். ஆகையால் இந்த லௌகிக சப்தம் முழுவதும் இந்த்ரியங்களைக் கொண்டு அறிந்த விஷயங்களையே போதிக்கக் கூடும். வேதமோ அப்படி புருஷனால் ஒருவித இந்த்ரியத்தாலோ அல்லது யுக்தியாலோ அறியக் கூடாதவைகளை (அதாவது: தர்மம் அதர்மம் ஈச்வரன் அவனுடைய ஆராதந ரூபங்களான கர்மங்கள் மோக்ஷம் அதன் உபாயங்கள் இவை போன்றவைகளை) போதிக்கின்றதாகும். இவைகளை நாம் சரிவர அறியவேண்டுமானால் வேதத்தைத் தவிர்த்து யாதொரு விதத்திலும் சரியான ப்ரமாணமில்லை. இதில் கொஞ்சமேனும் ஏமாற்றத்திற்கு இடமுண்டோ வென்கிற ஸந்தேஹத்திற்குக் காரணமான புருஷ ஸம்பந்தம் என்கிற காரணமில்லாமையால் முழுமையும் ப்ரமாணமே. அப்ரமாணம் என்பதற்குக் காரணமில்லாமையாலேயே வேதம் ஸ்வத: ப்ரமாணம் என்னலாயிற்று. எந்த ப்ரமிதியும் (அறிவு) முதலில் தோன்றும்போது ப்ரமாணமென்றே தன்னைத் தான் காட்டும். பின் அது அப்ரமாணம் என்பதற்குத் தக்க முகாந்தரமிருந்தால் அதைக்கொண்டு அந்த அப்ரமிதி அப்ரமாணமென்று அறியப்படும். ஒருவன் ஒரு ஸ்தம்பத்தைப் பார்த்து மனிதன் என்று நினைத்துவிட்டால், அது மனிதன் என்பதற்குத் தகுந்த வ்யவஹாரங்களையே அவன் செய்ய ஆரம்பிக்கிறான். பின் அது ஸ்தம்பம் தான் என்று வேறு காரணங்களைக்கொண்டு அறிந்துவிட்டால், முன் உண்டான அறிவு அப்ரமாணமென்று தோன்றி, அதற்குரிய வ்யவஹாரங்களும் மாறி விடுகின்றன. ஆகையால் வேதம் ப்ரமாணமாகமாட்டாது என்பதற்குத் தக்க காரணமில்லாமையாலேயே வேதம் ஸ்வத: ப்ரமாணம் என்னலாயிற்று.

இவ்வளவால் வேதங்களில் நம்பிக்கையும், வேதங்களை யநுஸரித்துப் பெரியோர்களால் எழுதப்பட்ட ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலும், அவைகளைச் சேர்ந்த மற்ற க்ரந்தங்களிலும் விச்வாஸமும், இவைகளில் விதிக்கப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களில் பூர்ணமான ப்ரீதியும், அந்த ப்ரீதிக்கு அடையாளமாக அவரவர்களுடைய வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் தகுந்த கர்மாநுஷ்டாநங்களில் சிரத்தையும், விலக்கவேண்டிய அதர்மங்களில் பீதியும், இக்கர்மங்களால் ஆராதிக்கப்படும் தேவதைகளிடத்திலும் இவைகளால் ப்ரதாநமாகவும் ஸாக்ஷாத்தாகவும் ஆராத்யனான ஸர்வேஸ்வரனிடத்தில் பக்தியும், வேதங்களையும் வேதார்த்தங்களையும் மிக ப்ரயாஸத்துடன் ஸம்ரக்ஷித்து வெளியிடும் மஹான்களிடத்தில் ப்ரீதியுமுள்ளவர்களே ஆஸ்திகர்களாவர்.

ஸ்ரீ:
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், நிகழும் வ்ருஷ ஷு ஐப்பசிமீ 9உ சனிக்கிழமை பஞ்சமி திநம் [25—10—1941] ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய திருவடிகளை அடைந்த வ்ருத்தாந்தம் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்த அழகிய சிங்கர், சென்ற துந்துபி ஷு தை மாஸத்தில், 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினவுடன் திவ்யாஸ்தானத்திற்கு எழுந்தருளி, 19 வருஷ காலமாக ஆஸ்தாந நிர்வாஹத்தை மிக்க பெருமையுடன் செய்து வந்தார். சுக்ல ஷு சித்திரை மாஸத்தில் தம்முடைய திருமேனியில் ஸ்வல்ப க்லாநி ஸம்பவித்த பொழுது, தமக்குப் பின் ஆஸ்தாந விஷயமாக வ்யவஹாரங்கள் ஒன்றும் ஏற்படாமல் இருப்பதற்காக, இப்பொழுது 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இஞ்சிமேட்டு ஸ்வாமியை வரவழைத்து அவருக்கு ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்வித்து, ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் திருநாமத்தை அவருக்குத் தாமே அநுக்ரஹித்தருளினர். இது சுக்லஷு சித்திரைமீ 22உ சனிக்கிழமை திநம் (4—5—1929) நடைபெற்றது. பிறகு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸங்கல்பத்தால் ஸ்ரீ அழகியசிங்கருடைய திருமேனி பாங்காயிற்று. அது முதல் 12 வருஷ காலம் இரண்டு திருநாமங்களுமாகவே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியிலேயே சேர்ந்து எழுந்தருளியிருந்து, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்யாராதநம் முதலிய கைங்கர்யங்களை அளவற்ற பெருமையுடன் நடத்தி வந்தார்கள்.

இந்த மஹானுக்குப் பூர்வாஶ்ரமத்தில் காருகுரிச்சி தட்டை வாதூல கோபால ராமபத்ராசார்யரென்று திருநாமம்; ஆநந்தஷு மார்கழிமீ பூரட்டாதி நக்ஷத்ரத்தில் (டிஸம்பர் 1854) திரு அவதாரம்; ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளினது துந்துபிஷு தைமீ 4உ (17—1—1923). ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளும்பொழுது 69 திருநக்ஷத்ரம்; தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும்பொழுது 87 திருநக்ஷத்ரம். இது பர்யந்தம் ஆஸ்தாநத்தில் அபிஷிக்தராய் எழுந்தருளியிருந்தவர்களுள் இந்த அழகிய சிங்கர் அளவு வயோ வ்ருத்தர் மற்றொருவருமில்லை. இந்த வார்த்தகத்திலும் அவருடைய அநுஷ்டாநம் சிறிதேனும் குறைவுபடாமலே இருந்துவந்தது; தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும் திநம் பர்யந்தம் ஸ்நாநம் முதலிய கர்மங்களும் லக்ஷ்மீந்ருஸிஹனுடைய கைங்கர்யமும் பூர்ணமாயும் முக்ய கல்பத்துடனுமே நடந்து வந்தன. க்ரந்த கால க்ஷேபங்கள் இராமல் ஒரு திநம் கூடக் கழிந்ததில்லை.

இவர் காலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விபூதிகளும் திநே திநே அபிவ்ருத்தங்களாகிக்கொண்டே வந்தன. பூமி வாங்கினது மாத்ரம் ஒன்றே முக்கால் லக்ஷத்திற்குமேல் உண்டு. ஜீர்ணோத்தாரணத்தில் ரூ. 50,000 க்கு மேலாகவே செலவு செய்யப்பட்டிருக்கின்றது; புதிய மடங்கள் கட்டின வகையில் ரூ. 60,000

...ளாகி இருக்கிறதாகத் தெரிகின்றது. திருவாபரண கைங்கர்யம் ரூ. 10,000 வரையில் நடைபெற்றிருக்கின்றதாம். தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும் தினத்தில் ரூ. 70,000 ரொக்கம் இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இவ்வளவு ஜாக்ரதை யுடன் விபூதி பரிபாலநம் செய்து வந்தது மிகவும் ஆச்சர்யகரமே.

இந்த ஸ்வாமியின் ஜ்ஞாநத்தைப்பற்றிப் பேசுவதற்கு நாம் அநர்ஹர். அது அபரிமிதமென்றே அபிஜ்ஞர்கள் சொல்லி நாம் கேட்டிருக்கிறோம். இவர் செய்தருளி யிருக்கும் க்ரந்தங்கள் பல உள. அவற்றுள்: ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹத்யாந ஸோபாநம், ஸ்ரீவேத பாதாசிதி ஸ்தவம், ஸ்ரீ தஸாவதார வேத பாதஸ்தவம், ஸ்ரீ நித்ய ப்ரார்த்தநா காரிகாவளி, ஸ்ரீ ஆசார்ய திநசர்யை, ஸ்ரீ மஹாஸ்வாமி கத்யம் இன்னும் இவை போன்ற க்ரந்தங்கள் ப்ரதாநமானவைகள். இவையெல்லாம் அவருடைய ஜ்ஞாநத்தை மாத்ரமின்றிக்கே, அவருக்குக் கிடைத்திருந்த தைவபக்தி ஆசார்யபக்தி முதலிய ஆத்ம குண பூர்த்தியையும் தெளிவாக வெளியிடுகின்றன. இப்படிப்பட்ட மஹாத்மாக்கள் மிகவும் துர்லபர்களே. இந்த விபூதியிலிருந்து அவர்கள் மறைந்துவிட்டாலும், அந்த விபூதியிலிருந்தும் ஆஶ்ரிதர்களை அவர்கள் கடாக்ஷித்து வருவார்கள் என்னும் நம்பிக்கையே நமது ஆஶ்வாஸத்திற்கு ஹேது.

*　　　*　　　*　　　*

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு ஐப்பசிமீ 18௳ திங்கட்கிழமை திநம் திவ்யாஸ்தாநத்தில் பட்டாபிஷேகம் நடந்தது. சத்ர சாமராதிகளுடன்கூட வேதகோஷம் முழங்க வீதிப்ரமணம் செய்து, பிறகு ஸ்ரீ ஸந்நி திக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளினர். ஐப்பசிமீ 22௳ 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ருந்தாவந ப்ரதிஷ்டை. 23௳ ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் ஆரம்பம். பிறகு கார்த்திகைமீ 13௳ ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதிக்கு மங்களாசாஸநத்திற்காக எழுந்தருளினர். யதாக்ரமமாக மர்யாதைகளெல்லாம் நடந்தன. கார்த்திகைமீ 8௳ ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் திருநக்ஷத்திரம். 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் மாஸாராதநம். 23௳ ஸ்ரீ தசாவதார ஸந்நிதியில் வேத பாடசாலை உபக்ரமிக்கப் பட்டது. மார்கழிமீ 12௳ முதல் 41-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரம். பாராயணம் முதலியவை 10 திநங்கள் நடைபெற்றன. 29௳ 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம். தைமீ 4௳ 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வர்ஷ திருநக்ஷத்ரம்.

*　　　*　　　*　　　*

சென்ற கார்த்திகைமீ 22௳ ஞாயிற்றுக்கிழமை திநம், (7—12—41) திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில், அநேக ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி அபிமாநிகளும் ஒன்றுசேர்ந்து ஸ்ரீ அழகியசிங்கருடைய பட்டாபி ஷேக ஸ்ரீமுகத்தை வித்வாந் தோட்டாலம் ஸ்ரீ வேணுகோபாலாசார்ய ஸ்வாமியைக் கொண்டு ஸேவிப்பித்தார்கள். சத்ர சாமரங்களுடனும் வாத்யம் வேதகோஷங் களுடனும் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியைச் சுற்றி நாலு வீதிகளிலும் ஸ்ரீ முகத்தை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு முதலில் வீதி ப்ரமணம் வந்தார்கள். பிறகு மடத்தில் ஸ்ரீமுகம் ஸேவிக்கப்பெற்றது. ஸ்ரீ தோட்டாலம் ஸ்வாமி அந்த ஸ்ரீமுகத்தின் அர்த்தத்தைத் தமிழில் விஸ்தாரமாக எடுத்து உரைத்தார். ஸம்பாவனைக ளெல்லாம் க்ரமமாக நடந்தபிறகு, கடைசியில் பழம் சர்க்கரை முதலியவை விநியோகம் செய்யப்பட்டன. ஸாயம் 6 மணிக்கு உத்ஸவம் முடிவடைந்தது.

மற்றும் பல சிஷ்யர்களும் தங்கள் தங்கள் திருமாளிகைகளில் ஸ்ரீமுகத்தைப் பற்பல திநங்களில் ஸேவித்து வந்தார்கள். மார்கழிமீ 7௳ ஞாயிற்றுக்கிழமை திநம் மாம்பலத்திலும் இந்த உத்ஸவம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா |
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

"தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: |
மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ||"

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் இளைய பெருமாளுடனும் பிராட்டியுடனும் தண்டகாரண்யத்திலுள்ள ஆஶ்ரம மண்டலத்தில் ப்ரவேசித்தபொழுது, அவ்விடத்திலிருந்த திவ்யஜ்ஞானமுடைய மஹர்ஷிகளெல்லாரும் பக்திப்ரேரிதர்களாய் எதிர்கொண்டுவந்து, இருளனைத்தும் போக்கி லோகம் முழுவதற்கும் ஆஹ்லாதகரமாக உயர உதிக்கும் சந்த்ரன்போல அபிமுகமாக வரும் ஸ்ரீ ராம சந்த்ரனை ஸாக்ஷாத்கரித்து, ராக்ஷஸர்களால் நிறைந்துள்ள இந்த வனத்தில் இவனுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்துவிடுமோவென்று பயந்து விரோதி நிரஸநங்களான மங்களங்களை ப்ரயோகித்தார்களென்று ஸ்ரீ வால்மீகி பகவான் அநுக்ரஹித்திருக்கிறான். அம்மாதிரியே இப்பொழுது ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரை வைதிகாக்ரேஸரர்களெல்லாரும் கண்ணார ஸேவித்து அவருடைய வைராக்ய விஶிஷ்டமான ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்தையும் உத்தமங்களான ஆத்ம குணங்களையும் பார்த்து ஆநந்த பரவசர்களாய் ஏகமுகமாக மங்களாஶாஸநம் செய்து வருவதை நாம் காண்கின்றோம். கண்தெரிந்த பசுக்கள் இடமறிந்து கனைக்கக் குருட்டுப் பசுவும் கூடக் கனைக்குமாப்போல, அபிஜ்ஞர்களான வைதிகர்கள் ஸ்துதிப்பதைப் பார்த்து அறிவிலியான நாமும் கூட ஸ்துதிக்கத் துணிகின்றோம். ஆனால் "நிஸ்ஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச"

...கிறபடி ஆஸ்ரிதர்களிடம் பரம ஔதார்யத்தைப் பாராட்...ம ஶீல முள்ள ஸ்ரீ அழகியசிங்கர், நம்முடைய உபசாரத்தை க்ருபையுடனும் ப்ரீதியுடனும் திருவுள்ளம் பற்றும்படியிருக்குமே யன்றி, நம்முடைய தோஷங்கள் காரணமாக அதை நிராகரிக்கும் படி யிராது என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

*   *   *   *

ஸ்வல்ப காலமாகக் கலியின் கொடுமையால் தைவமொன்று உண்டு என்னும் ஜ்ஞாநம் ஜகத்தில் மலிநமாகி வருவதை நிரூபகர்கள் அறிவார்கள். பெரும்பாலும் ஜநங்கள் உண்மை யறிவற்றவர்களாய், அர்த்தம் காமம் இவைகளையே பெரிதாகக் கருதி

கலியின் கொடுமை

அவைகளின் அபிவ்ருத்திக்காக மாத்ரம் ப்ரயத்நப் பட்டு, ந்யாயாபந்யாய விசாரமின்றிக்கே "[illegible]" என்கிறபடி செல்வத்தைச் சேமிப்பதற்கு ப்ரயத்நப்பட்டு வருகிறார்களே யொழிய, ஜகத் தைவமொன்றால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்றாவது அது அந்தத் தைவத்தின் ஸங்கல்பத்தால் நிலைபெற்றிருக்கின்றது என்றாவது அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி அந்தத் தைவமே நமக்குப் பலங்களைக் கொடுத்து வருகிறதென்றாவது அறிகிறார்களில்லை; இவற்றைக் குறித்து எவ்வளவு சொன்னாலும் கேட்பதுமில்லை.

இவ்வறியாமை ஸாமாந்ய பாமர ஜநங்களிடம் மாத்ரம் இராமல், மஹா ஜநங்களை அடக்கி ஆளும் பெரியோர்களையும் ஆக்ரமித்து வருகின்றது. இதன் பலத்தை இப்பொழுது நாம் நிதர்சநமாகப் பார்க்கிறோம். லோகத்தில் இருக்கும் ராஜாங்கத்தாரெல்லாரும் இப்போது ஒருவரோடொருவர் பெரிய போர் புரிந்து வருகிறார்கள். ஆயிரக்கணக்காக ஜநங்கள் மடிகின்றன; கோடிக் கணக்காகச் சொத்துக்கள் நாசமடைகின்றன; வெடிகுண்டுகள் பல்லிடங்களிலும் பறக்கின்றன. போர்வீரர்கள் மாத்ரமின்றிக்கே எவ்வித குற்றமுமறியாத ஸ்த்ரீ பால வ்ருத்தர்களும் குண்டுக்கு இரையாகி வருகின்றனர். நேற்று பர்யந்தம் மேல்நாடுகளில் மாத்ரம்